Registered No. M-4483.

யுத்த சஞ்சிகை

மலர் IV.] 1943-ம் ௵ செப்டெம்பர் ௴ 10௳, வெள்ளிக்கிழமை [இதழ் 2

கொடுமை தான் நம் எதிரி

ஏது சரி? எது முறை? ஆகியவை பற்றிய அபிப்பிராயங்கள், நியாயமான முறையில், குறிப்பாக பலவீனர்களிடத்திலும், ஏழைகளிடத்திலும் நியாய மான முறையில் நடந்து கொள்ளுவது, பாரபட்ச மற்ற முறையில் நீதி செலுத்துவதில் மன உறுதிப் பாடு, இவை எல்லா வற்றையும் விட, தனிப்பட்ட ஒவ்வொருவருக்கும் சுயேச்சை வேண்டு மென்பதில் ஆசை, ஆகியவை, அமெரிக்கர்களுக்கும் பிரிட்டிஷாருக்கும் உள்ள பொதுவான நோக்கங்கள்.

மிஸ்டர் சர்ச்சில்.

உங்களைப் போலவே நாங்களும் இந்தக் கருத்துக்களில் உறுதி கொண்டிருக்கிறோம். அடிப்படையாக, மக்கள் இனத்தோடு நாம் போராட வில்லை; ஆனால் கொடுமை தான் நமது எதிரி. கொடுமை எந்த உருவத்தில் மறைந்திருந்தாலும், எந்த மொழியைப் பேசினாலும், உள் நாட்டுக் கொடுமையா யிருந்தாலும் வெளி நாட்டுக் கொடுமையா யிருந்தாலும், அது தான் நமது எதிரி. ஆகவே, நாம் எப்போதும் எச்சரிக்கையா யிருக்க வேண்டும். நம் படைகளைத் திரட்டி, கொடுமை தலை காட்ட ஒட்டாதபடி அதை முளையிலேயே கிள்ளி யெறிய ஆயத்தமா யிருக்க வேண்டும். இவற்றில் நாம் ஒன்று பட்டு முன்னேறிக் கொண்டிருக்கிறோம்.

போர்க்களத்திலும், ஆகாயத்திலும், எதிரியின் நெருப்புக்கு நடுவிலுங் கூட, நாம் தோளோடு தோள் சேர்த்து நின்று, முயற்சித்து வருகிறோ மென்பது மட்டு மல்ல. மனித உரிமைகளுக்கும் கௌரவத்திற்கும் அடிப் பீடமான அறிவுத் துறையிலும் ஒன்று பட்டிருக்கிறோம்.

நோக்கத்திலும் பலனிலும் ஒன்று போல் அமைந்துள்ள இதர துறைகளைப் போலவே, இதிலும் நாம் முன்னேறிப் போவோம். யாரிடத்திலும் வெறுப்புக் கொள்ளாமல் நல்லெண்ணத்தைக் கொண்டே, நாம் முன்னேறிப் போவோம். பிற மக்களின் மாகாணங்களையோ நாடுகளையோ கைப்பற்றிக் கொள்ளுவதை விட, அவர்களைச் சூறையாடி நசுக்குவதை விட, இப்படிப்பட்ட திட்டத்தால் நல்ல பலன் ஏற்படும். எதிர் கால சாம்ராஜ்யங்கள் அறிவைக் கொண்டு கட்டப்பட்டவையாகத் தான் இருக்கும்.

—மிஸ்டர் சர்ச்சில் செப்டம்பர் மாதம் 6-ம் தேதி
ஹார்வார்ட் சர்வகலாசாலையிற் கூறியது.

பொருளடக்கம்.

	பக்கம்.
முகப்புப் படம் : மிஸ்டர் சர்ச்சில்	1
"கொடுமைதான் நமது விரோதி"	1
யுத்த சபைளையும் யுத்த முயற்சியும்	2
தலையங்கம் : யுத்த தொழிற்சாலைகளும் அவற்றின் பயனும்	3
யுத்த நிலைமையும் இந்தியாவின் முயற்சியும் ..	5
"கோதாவரி" வழி காட்டுகிறது	6
பொய் வதந்திகளுக்கு மறுப்பு	6
இயந்திரப் படகுகளைப் பற்றிய தகவல்கள், அரசாங்கத்திற்கு அறிவிக்கவேண்டும்	6
அங்கும் இங்கும்	7

யுத்த சபைளையும், யுத்த முயற்சியும்

செப்டெம்பர் மாதம் 1-ம் தேதியில் சென்னை வானொலி நிலையத்திலிருந்து "யுத்த முயற்சி" என்னும் தொடரில், ராவ் சாஹிப் டி. எஸ். கச்சாபிகேச முதலியாரவர்கள் ஒலிபெருக்கிய பிரசங்கமாவது :—

கொஞ்சம் கற்பனையைச் செலுத்தி, ஆயிரம் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்பு, நாம் இருப்பதாக வைத்துக்கொள்வோம். அதாவது அந்தக் காலத்திலே நாம் வாழ்வதாக வைத்துக் கொண்டால் எத்தனையோ வித வித வாழ்க்கை அனுபவங்களும் நமக்கு ஏற்பட்டே இருக்கும். முன்காலத்து வேந்தர்கள், வீரர்கள் புடை சூழ வேற்று நாட்டின் மீது படையெடுத்துச் சென்றால், அந்த காட்சியை சற்று கற்பனை செய்து பாருங்கள். இராமாயண பாரத கால யுத்தங்கள் எப்படி நடந்திருக்கும் ?

வீரர்கள் ஒருவரோடு ஒருவர் கைகலப்பார்கள். வாள் போர் ஒரு புரம், மல்யுத்தம் இன்னொருபுரம், கத்திகேடயங்கள் வைத்துக்கொண்டு மற்றொரு பக்கத்திலே சமர் நடக்கும். அதோடு குதிரைப் படை யானைப்படை காலாள் படை இப்படியாக யுத்த அரங்கிலே தங்கள் தங்கள் பராக்கிரமத்தை காட்டிக் கடும்போர் புரிவார்கள்.

ஆனால் இன்றைய உலகிலே, நாம் காண்பதென்ன ?

இந்த இருபதாம் நூற்றாண்டிலே, பெரிய பெரிய வல்லரசுகள் ஒன்றோடொன்று முட்டி மோதி பயங்கரமாக, நவீன ஆயுதங்களை தாங்கி எந்த விதம் போராடுகிறார்கள் ? இதையும் சற்று கற்பனை செய்து கொள்ளுங்கள்.

ரத்த வெறியர்களை ஒழிக்க விஞ்ஞான அறிவு.

நாட்டாசை பிடித்த கொடிய யுத்தவெறி கொண்ட சர்வாதிகாரிகள் தங்கள் மனம்போன போக்கில் என்னென்ன அட்டூழியங்கள் புரிகிறார்களென்பதை விளக்க வேண்டியதில்லை. இருந்தாலும், சத்தியத்தையும் தர்மத்தையும் நிலைநாட்டி, எல்லா தேசத்திலும் நியாயத்தை நிலை நிறுத்தப் போராடும் ஜனநாயக தேசங்கள் போக்கையும் நீங்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். நேச தேசங்களிலுள்ள அறிஞர்களுக்கு, நவீன விஞ்ஞானத்தில் புதிய சிருஷ்டி, கலை, வாழ்வை வளப்படுத்த உபயோகப்படுத்த தெரிந்திருந்தும், கொடிய ரத்த வெறிகொண்ட சர்வாதிகாரக் கும்பலை அழிக்க முற்பட்டிருக்கிறார்கள்.

புதிய புதிய டாங்கிகள், கப்பல்கள், ஏரோப்ளேன்கள், நீர்மூழ்கிகள், விஷப்புகைப் போக்கிகள், லாரிகள் இவையெல்லாம் இந்த யுத்தத்திலே பெரும் பங்கெடுத்திருக்கின்றன. அவைகளை இயக்குவோர், தங்கள் லட்சியத்திலே கண்ணும் கருத்துமா யிருக்கிறார்கள். தாங்கள் ஈடுபட்டுள்ள மகத்தான வேலையில் அவர்கள் ஊக்கம் குறையாமல் அல்லும் பகலும் பாடுபடுகிறார்கள். அவர்கள் தங்கள் முயற்சியில், நிமிஷத்துக்கு நிமிஷம், புதுப்புது கருவிகளை கண்டு பிடிப்பதோடு உடனே காரியத்தில் உபயோகப்படுத்துவதிலும் தயங்குவதில்லை. அப்படி அவர்கள் அதிக ஆர்வமும், அக்கரையும் காட்டாவிட்டால், உலகில் என்ன நிகழுமென்பது அவர்களுக்கு தெரிந்தே இருக்கிறது. இந்த ஒரு விஷயத்துக்குத் தான் நாம் அந்த காலத்தை கற்பனை செய்து பார்க்க வேண்டுமென்று சொல்கிறேன். முன் நாளிலெல்லாம், யுத்தகளத்தில்தான், தகுந்த முன் அறிவிப்போடு யுத்தங்கள் நடைபெற்று வந்தன. போரிலே ஈடுபட்டுள்ளோருக்கு மட்டுமே அதன் பலாபலன் கிடைத்தது. சொந்த ஊர்களிலும் சுற்றுப்புறங்களிலு மிருந்து மக்கள், யாதொரு இன்னலுக்கும் ஆளாகவில்லை. ஆனால் இன்றோ ?

நாட்டாசை கொண்டவர்களின் கனவு.

பால் மணம் மாறாப் பாலர்களும், வியாதியஸ்தர்களும், விருத்தர்களும், குழந்தை குட்டி ஆண் பெண் அனைவருமே யுத்தத்தால் பாதிக்கப்படுகிறார்கள். நாட்டாசை கொண்ட சர்வாதிகார அரக்கர்கள், ஈவு இரக்கமின்றி குண்டுகளை எந்தப்பக்கம் வேண்டுமானாலும் வீசுகிறார்கள். அவர்களுடைய நோக்கம் ஒரே ஒன்றுதான். மனித நாகரிகம், கலை, இலக்கியம், தர்மம், நியாயம், இவை எல்லாம் எக்கேடு கெட்டுப் போனாலும் அவர்களுக்குக் கவலை இல்லை. எப்பாடு பட்டாவது எல்லா தேசத்தையும் கட்டியாளவேண்டும். எல்லாரையும் அடக்கி ஒடுக்கி தங்கள் அக்கிரம ஆட்சியைச் செலுத்தியாக வேண்டும். சதா அவர்களுடைய கனவு இதுவேதான்.

இந்த இயற்கைக்கு விரோதமான கனவை அடியோடு நாசமாக்க வேண்டுமானால், நாம் செய்ய வேண்டியதென்ன ? தற்போது நம் அனைவருடைய கவனத்தையும் கவரும் பிரச்னை எது ?

நாம் எல்லோருமே, ஒருமுகமாக முனைந்து செய்யவேண்டிய காரியம், நம்மாலான காரியத்தை உடனே செய்ய வேண்டியது தான். யுத்த சபைகளுக்கு அதாவது யுத்த முயற்சியில் ஒவ்வொருவரும் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும். தேசத்துக்காக போர் புரியும் வீரர்களுக்கு இத்தக்க தருணத்தில் நாம் ஊக்கமும் உற்சாகமும் அளித்தால்தான், உண்மையான ஜனநாயகம் தழைக்க, பாடுபட்டவர்களாவோம்.

நமது முதல் படிப்பினை.

ஒரு அடி மண்ணைக்கூட, ஒரு சிறு பொருளைக்கூட அனாவசியமாக வீணாக்கக்கூடாதென்பது முதல் படிப்பினையாக இருக்கவேண்டும்.

முடிந்த வரையில் பயிர் செய்ய முயல வேண்டும். காய் கறிகளை பெருக்குவதின் மூலம், உணவு பிரச்னையில், நாமும் கொஞ்சம் பங்கெடுத்துக் கொண்டவர்களாவோம். கழிவுப் பொருள்களின் உபயோகத்தைப் பற்றியோ சொல்ல வேண்டியதில்லை. கூடவே சிக்கனமாக வாழும் முறையை நாம் நடத்திக் காட்டவேண்டும். தேவைக்கு அதிகமாகப் பொருள்களை வாங்கி வீணாக்குவதால், பலபேருக்கு அசௌகரியத்தை விளைவித்தவர்களாகிறோம்.

நம்முடைய சிறு செயலும் யுத்த முயற்சிக்கு உதவுவதாக இருந்தால் ? விரைவிலே வெற்றிப்படியில் கால் வைத்துவிட்டோ மென்பதை நீங்கள் உணரவேண்டும். யுத்த சகாய நிதிகளுக்கு தாராளமாக நீங்கள் உதவிவிட்டால், அதோடு உங்களுடைய கடமை தீர்ந்துவிட்டதாக ஆகிவிடாது.

ஒவ்வொரு சின்னஞ்சிறு காரியங்களையும், நீங்கள் ஊன்றி கவனிக்க வேண்டும். எங்கோ மேற்கு பாலைவனத்திலே பர்மாவின் மலைச்சரிவிலே, குண்டு குழி நிறைந்த மலை பிரதேசத்திலே, பள்ளத்தாக்கிலே நம்முடைய சிப்பாய்கள் போராடுவதாக வைத்துக்கொள்வோம். ஆனந்தமாக நிலா இரவுகளிலும், ஓய்வு நேரங்களிலும், அவர்களுக்கெல்லாம் இன்பமாக பொழுது போகவேண்டாமா ? அதற்காக நீங்கள் என்ன செய்ய வேண்டும் ? உங்களிடம் நிறைய பழைய புது புத்தகங்கள் இருக்கின்றனவா ? உடனே யுத்தக் காரியதரிசிகளுக்கு அனுப்பி வையுங்கள். விரைவில் நம் சிப்பாய்களின் கைக்கு அந்தப் புத்தகங்கள் போய்ச் சேரும். புத்தகம் பத்திரிகை என்று இல்லை. வீட்டிலே கிராம்போன் பெட்டி பிளேட்டுகள் இருக்கிறதா ? பிளேட்டுகள் நீங்கள் கேட்டு அனுபவித்தவை தானே ? நீங்கள் அனுபவித்த ஆனந்தத்தை உங்களது போர் வீரர்கள் அனுபவிக்க வேண்டாமா ? தயங்காமல் உடனே அனுப்ப ஏற்பாடு செய்யுங்கள்.

இன்னும் ஒரு சிறு உதாரணம். கொடிய பாஸிஸ நாஜி வெறியர்கள் என்னென்ன தந்திரங்களை கையாளுகிறார்கள் தெரியுமா ? கொஞ்ச நாளைக்கு முன் ஒரு ரஷ்ய கிராமம் ஒன்றிலே, ரஷ்யப் பட்டாளம் ஒன்று தன் எதிரி சேனையைத் தாக்கப் போய்க்கொண்டிருந்தது. அவர்கள் உல்லாசமாக பேசிக்கொண்டும் பாடிக்கொண்டும் நடந்து சென்றார்கள். அந்தக் கூட்டம் செல்லும் திசைக்கு எதிரிலே, ஒரு மரத்தினடியே குருடன் ஒருவனும் நின்று கொண்டிருந்தான். சைன்யங்கள் போகப் போக அந்த பிச்சைக்கார குருடனும் என்னமோ மெதுவாக பாடிக்கொண்டே பின் தொடர்ந்தான்.

கொஞ்ச நேரத்திலே ஒரு அதிகாரி அவனைத் தொடர்ந்து, நீ யார் என்று கேட்டார். அவன் பதில் சொன்னான். அதில் ஆச்சரியம் என்னவென்றால், ரஷ்ய உடையிலிருந்த அந்த ஜெர்மன் ஒற்றன், அழகாக ரஷ்ய பாஷையையும் பேசினான். ஆனால் விரைவிலே அவன் குருடனல்ல என்பது வெளிப்பட்டுவிட்டது. அவன் குண்டு குழி பார்த்து நடப்பதிலே சந்தேகம் கொண்டு சாமர்த்தியமாக அந்த ஒற்றனை கண்டு பிடித்து விட்டார்கள். சேனை போகும் விபரங்களை தன் சைன்ய தலைவனுக்கு ரகஸ்ய ரேடியோவிலே தகவல் கொடுத்துக் கொண்டேபோன அந்த ஜெர்மன் ஒற்றனுடைய உள்வு, வெளிப்பட்டுவிட்டது.

இந்த மாதிரி எண்ணற்ற தந்திரங்களைக் கையாளும், நாட்டாசை கொண்ட வெறியர்களை அடியோடு நிர்மூலமாக்கி, உலகில் சுதந்திரத்தையும், சுயேச்சையையும் நிலை நாட்ட வேண்டுமானால் நாம் உடனடியாக என்ன செய்ய வேண்டும் ?

யுத்த சபைகளிலும், யுத்த முயற்சியிலும், பரிபூர்ணமாக பங்கெடுத்துக் கொள்ளவேண்டும். பிறகு வெற்றிக்கு கேட்பானேன் ? ஜெயம் நம்முடையதே தான். சத்தியம் தழைக்கும், சந்தேகமில்லை.

யுத்த சஞ்சிகை

வார வெளியீடு

மலர் IV] 1943-௵ செப்டெம்பர் ௴ 10௳. [இதழ் 2

யுத்த தொழிற்சாலைகளும் அவற்றின் பயனும்

“ தமது வாக்குறுதிகளை, நேச நாடுகளைச் சேர்ந்தவர்கள் எவ்வளவு சிறந்த முறையில் நிறைவேற்றுகிறார்கள் என்பதற்கு, வடாப்பிரிக்காவில் நேச நாடுகளுக்கு வெற்றி கிடைக்கும் பொருட்டு, படைகளையும் பொருள்களையும் இந்தியா கொடுத்து உதவி யிருப்பது ஒரு சிறந்த சான்றாகும்.” என்று அமெரிக்க யுத்தத் தகவல் காரியாலயத்தார் குறிப்பிட்டனர்.

“ அநேக தொழிற்சாலைகளில் மிகவும் முக்கியமான யுத்தப் பொருள்கள் உற்பத்தியாகின்றன. இவற்றில் இனி நம் நாட்டிற்குத் தேவையான பொருள்களை உற்பத்தி செய்வதற்கு, முந்தியிருந்ததைவிட அதிக வசதிகள் ஏற்பட்டிருக்கின்றன. அன்றியும் தொழிலைப் பற்றிய அறிவும் பெருகிறது, அனுபவமும் அதிகப்படுகிறது” என்று மேன்மை தங்கிய வைசிராய் பிரபு சென்ற ஆகஸ்ட்டு மாதத்தில் சட்டசபையில் கூறினார்.

இந்தியாவில் யுத்த உற்பத்தியின் வளர்ச்சி இரண்டு வகைகளில் நன்மை தருகிறது. (1) இந்தியாவிலும் வெளி நாடுகளிலுமுள்ள படைகளில் எத்தனைப் பேர்களுக்கு, தேவையானவற்றை செய்து உதவ வேண்டுமோ, அத்தனைப் பேர்களுக்கு உதவுவது. (2) மனிதனும், மிருகமும் இயந்திரமும் உய்யத் தக்கபடி உற்பத்தியைப் பெருக்குவது.

அமெரிக்கக் காங்கிரசுக்கு அதன் தலைவர் மிஸ்டர் ரூஸ்வெல்ட் விடுத்த அறிக்கை யொன்றில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டிருந்தார் :—

“ இந்த யுத்தம் எவ்வளவு காலத்திற்கு நடக்குமென்று அளவிட்டுச் சொல்லமுடியாது ; ஒப்பிடவும் முடியாது ; அல்லது பணத்தைக் கொடுத்து நிறுத்திவிடவும் முடியாது. நாம் போராடுவது பொது யுத்தம். இது உலகம் முழுதும் விரவி யிருக்கிறது. இதில், நேசதேசத்தார் தம்மிடமிருக்கும் ஆட்களையும், பொருட்களையும் இயந்திரங்களையும் தகுந்தபடி பயன்படுத்த வேண்டுமானால், ஒரு பொதுத் திட்டம் வேண்டும்.”

இவ்வாறாக யுத்த உற்பத்திகளின் நோக்கம், எல்லா வகைகளிலும் உற்பத்தியைப் பெருக்குவது மாத்திரமல்ல ; எதிரிகளை முழு மூச்சாகத் தாக்கி வீழ்த்தக்கூடிய அளவிற்கு, உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்பது தான்.

இந்தியாவிலிருந்து சப்ளைகள்.

இப்படிச் செய்வதனால், இந்தியக் கைத் தொழில்களின் உற்பத்தி சக்தி மிகவும் அதிகப்பட்டிருக்கிறது. இதற்கு மூன்று காரணங்களுண்டு. (1) தற்போதுள்ள மூலப் பொருட்களை அதிகப்படுத்தினர். (2) புதிய இயந்திரங்களை இறக்குமதி செய்தனர். (3) தொழில்களில் தொழிலாளர்களை விரைவாகப் பயிற்றுவித்தனர். இந்நாட்டின் கைத்தொழில் அமைப்பில் இவை நிலையான ஸ்தானத்தைப் பெற்றுவிட்டன. இதனால், இந்தியாவிற்கு எந்த அளவிற்கு சாதகம் ஏற்படுமென்றால், நம் நாட்டிலுள்ள கைத்தொழில் முதலாளிகள் யுத்தத்திற்குப் பிறகு, எவ்வளவு திறமையோடும் முயற்சியோடும் தொழில் நடத்துகிறார்களோ அதைப் பொறுத்துத் தான் சாதகம் ஏற்படும்.

தொழிலாளர் துறையில், சந்தர்ப்பங்கள் உண்டாக்கப்பட்டிருக்கின்றன. புதிய வழிகள் ஏற்பட்டிருக்கின்றன. இதுவரை வேலைக்கமர்த்தப்பட்ட பழைய முறையிலன்றி புதியதோர் முறை வகுக்கப்பட்டிருக்கிறது. இதுவரை நிறுவை இயந்திரம் மட்டும் உற்பத்தி செய்து கொண்டிருந்த ஒரு இந்தியக் கம்பெனி, இப்போது “ஸ்டீம் பிரஸ்கள்,” சர்க்கரை ஆலைகள், காயப்பட்டவர்களைத் தூக்கிக்கொண்டுபோகும் தொட்டில்கள் (“ ஆம்புலென்ஸ் ஸ்ட்ரெச்சர் ” முதலியவை செய்வதுடன், உருளைக் கிழங்கையும் பாடம் செய்கின்றது. சணல் ஆலைகள், ‘ ஷெல் ’ வெடி குண்டு மூடிகள் செய்கின்றன ; பஞ்சாலைகள் மிஷின் பீரங்கி ‘ பெல்ட்’கள் செய்கின்றன. ஒரு ‘ டெலிபோன் ’ கம்பெனி விமானத் தாக்குதல் அறிவிப்புச் சங்குகள் செய்கின்றது.

தங்க வெள்ளி நகைகள் செய்கிறவர்கள் இப்போது, செப்புக் கம்பிகளை ‘ மோட்டார்’களுக்காகவும் ‘ டைனமோ’க்களுக்காகவும் இழுக்கின்றார்கள். கடிகாரம் செய்கிறவர்கள் தமக்குள்ள அறிவைக் கொண்டு மிகவும் சிக்கலான விமான இயந்திரங்களைப் பழுதுபார்க்கிறார்கள். இவைதான், அகன்று பரந்த வானில் விமான மோட்டிகளுக்கு உதவக் கூடியவை. கல்லூரி மாணவர்கள் நுட்பமான இயந்திரங்களைச் செய்வதில் கைப்பழக்கம் பெறுகிறார்கள்.

அநேக சிறிய ரப்பர் தொழிற்சாலைகளில், பழையகாலத்து இயந்திரங்களைக் கொண்டு, ரப்பர் கைக் கவசம், ‘ ஹோஸ் பைப் ’ முதலிய ரப்பர் பொருட்களைச் செய்கிறார்கள். கிராமங்களில் லட்சக் கணக்கான கத்திகளும், உணவு உண்ண உபயோகிக்கப்படும் முட்களும், பாதரட்சைகளும் லட்சக்கணக்கில் தயாரிப்பதில் ஆண்களுக்குப் பெண்களும் உதவுகின்றனர்.

இந்தியாவில் உற்பத்தியாவதில் எவை நிரந்தரமானவை ?

யுத்தத்திற்கு முன்பு இந்தியாயில் உற்பத்தி செய்யப்பட்டவற்றில், எஃகு முதல் தக்கைத் தொப்பி வரை, எல்லாப் பொருட்களும் வெகுவாக அதிகப்பட்டிருக்கின்றன. இதற்குக் காரணங்களாவன :—(1) வேலை முறையை அதிகப்படுத்துவது. (2) இயந்திரங்களையும் அவற்றில் வேலை செய்தவர்களையும் மாற்றி வேலைக்கு விடுவது. (3) அதிக இயந்திரங்களை நிர்மாணிப்பது. இப்படி அதிகப்பட்டிருப்பதற்குக் காரணம், தனிப்பட்ட தொழிற்சாலை முதலாளிகளின் முயற்சி இதில் எந்த அளவிற்கு உண்டோ அந்த அளவிற்கு அரசாங்க உதவியு முண்டு. எஃகு, இரும்பு கலவாத உலோக சம்பந்தமான கைத் தொழில்கள், தோலினால் செய்யப்பட்டவை ரசாயனப் பொருள்கள், மூலிகைப் பொருட்கள் , ஆகியவை ஒரு பாதிக்கு மேல் அதிகப்பட்டிருக்கிறது. இதினின்று இவை எந்த அளவிற்கு அதிகமாக உற்பத்தியாயிருக்கின்றன வென்று தெரிகின்றது.

பொருள் வகைகளிலும் அளவிலும் உற்பத்தி வெகுவாக அதிகப்பட்டிருக்கின்றன. யுத்தத்திற்கு முன்பு இந்தியாவில் செய்யப்பட்டிராத பல பொருட்கள் இப்போது செய்யப்படுகின்றன.

இவற்றில் சில, இராணுவத்திற்குப் பெரிதும் பயன் படத்தக்கன. உதாரணங்களாவன :— ஆயுத மேற்றிப் போகும் இராணுவ லாரிகளுக்கு மேற்கூடுகள், சுரங்கவாரிக் கப்பல்கள், புதிய வகை ஆயுதங்களும் வெடி மருந்துகளும், இராணுவத்தைச் சேர்ந்தவர்களுக்கு உபயோகமான பல வகைப் பொருட்கள்.

மற்றவை எல்லாம், தொழில் உற்பத்தியில் நிரந்தரமாகச் சேர்க்கப்படக் கூடியவையா யிருக்கலாம்.

இவ்வாறாக, பல வகைப் பொருள்கள் செய்வதற்குப் பயன்படக் கூடிய எஃகு உற்பத்தி செய்வதற்கு, இப்போது தான் இந்தியாவில் திட்டமிடப்பட்டிருக்கிறது. யுத்தம் முடிந்த பிறகு, இந்தியாவிற்குத் தேவையான கருவிகள், குழாய்கள், அச்சுகள், சிறு கருவிகள் முதலியவற்றை இந்தியாவிலேயே செய்துகொள்ள வேண்டும்.

உற்பத்திப் பெருக்கத் திட்டம்.

இயந்திரக் கருவிகள் ஏராளமாகச் செய்யப்படுகின்றன. அவற்றின் தன்மையும் மிகவும் உயர்ந்தது. உற்பத்திப் பெருக்கத் திட்டத்தில், ஐந்து முக்கியமான உற்பத்தியாளர்கள் பங்கு கொள்ள இசைந்திருக்கின்றனர். இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு, தற்காலத் தொழில் நிபுணர்களுடைய உதவி கிடைக்கிறது. தொழிற்சாலைகளைப் பெரிதாக்கும் பொருட்டு கட்டடங்கள் கட்டி முடிந்து விட்டன. அங்கே அமைக்கப்பட வேண்டிய இயந்திரங்கள் வந்து இறங்க ஆரம்பித்திருக்கின்றன. இறங்கும் போதே, அவற்றை அங்கங்கே அமைத்து விடுகிறார்கள். இப்படிப் பெருக்குவதற்கு 3 நோக்கங்கள் உண்டு. (1) யுத்த முயற்சிக்கு இந்தியாவின் உதவியை அதிகப்படுத்துவது. (2) இறக்குமதி செய்யவேண்டிய அவசியத்தைக் குறைத்து, கப்பல்களில் இடத்தைத் தாராளமாக மிச்சப்படுத்துவது. (3) சமாதான காலத்தில் உதவத் தக்கவாறு இந்தியாவில் இயந்திரக் கருவிகள் உற்பத்திக்குத் தகுந்தபடி ஒரு கம்பெனியை நிரந்தரமான முறையில் அமைப்பது.

இது போலவே, ரசாயனத் தொழிலிலும், மருந்துகள் செய்யும் தொழிலிலும் அடிப்படையான முன்னேற்றம் உண்டாகி யிருக்கிறது. உண்மையிலேயே, கைத் தொழில் துறையில் பெரும் பகுதியில் இப்படிப்பட்ட முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. புதிய இரசாயன இயந்திரங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதை இன்னும் விரிவாக்கி அடிப்படையான ரசாயனப் பொருட்கள் ‘ பவர் ஆல்கஹால் ’ ஆகியவற்றை மேலும் அதிகமாக உற்பத்தி செய்வதற்கு முயற்சிக்கப்படுகிறது.

யுத்தத்திற்கு இந்தியப் பட்டு

விமான யுத்தத்தில் 'பாரச்சூட்' எவ்வளவு பயன்படுகிறதோ, அது போலவே, பட்டும் யுத்தத்திற்குப் பெரிதும் பயன்படுகிறது. யுத்தங் காரணமாக பட்டு நெசவுத் தொழில் மிகவும் உயர்ந்த நிலையை அடைந்திருக்கிறது. இது பண்டைக் காலத்திய கைத் தொழில். இது மீண்டும் ஓங்கி வளர்ந்திருக்கிறது. பட்டுப் பாகு ஓடுவது இரண்டு மடங்கு அதிகரித்திருக்கிறது. இந்தியாவில் இது வரை 750 'பேசின்' கள் தான் வேலை செய்து கொண்டு வந்தன. யுத்தப் பெருக்கத் திட்டத்தின் பயனாக இது 3,000 'பேசின்' ஆக அதிகப்படும். இதுவல்லாமல் ஜம்முவிலும் காஷ்மீரிலும் 1,000 'பேசின்'கள் வேலை செய்கின்றன.

'டையர்' உற்பத்தியும் வெகுவாக அதிகப்பட்டிருக்கிறது. ரப்பரைப் புதுப்பிக்கும் இயந்திரங்கள் அங்கங்கே அமைக்கப்பட்டு வருகின்றன. ரப்பர் உற்பத்தியும் அதிகப்பட்டுக் கொண்டு வருகிறது. ரப்பருக்குப் பதிலாக உபயோகிக்கப்படும் பொருள்களும் வெகுவாக உற்பத்தியாகின்றன. ரப்பர் உண்டாகும் புது மாதிரியான மரங்களும், பயிர் செய்யப்பட்டு வருகின்றன.

சிவில் சப்ளைகளுக்கு ஏற்பாடு

யுத்த சப்ளைக்கு என்னென்ன பொருட்கள் எவ்வளவு வேண்டியிருக்குமென்பது பற்றி முன்னதாகவே திட்டமிட்டு 'ஆர்டர்' கொடுக்க வேண்டும் என்னும் கொள்கையை இந்தியா அரசாங்கத்தார் யுத்த ஆரம்பத்திலேயே தெளிவாக உணர்ந்து கொண்டார்கள். 1939-ம்வரு முதலே, அடுத்த வருஷத்திற்கு எவ்வளவு வெடி மருந்துகள் தேவைப்படும் என்று முன்னதாகவே நிர்ணயிக்கப்பட்டு வந்தது. 1940-41-ம் வருஷம் முதல், இதே முறையை யொட்டித் தான், மற்ற எல்லாப் பொருள்கள் உற்பத்தியும் முன்னதாகவே திட்டமிட்டார்கள். யுத்த உற்பத்திக்காக மட்டுமன்றி, முக்கியமான சிவில் சப்ளைகளுக்காகவும் இன்னும் சில மாதங்களில் திட்டமிடும்படி நேரும். உதாரணமாக ஒரு பெரிய மின்சார இயந்தரம் இது வரை யுத்த உற்பத்திக்காகப் பயன்பட்டு வந்தது. இப்போது ஐக்கிய மாகாணத்தில் ஓரிடத்தில் அதை அமைத்திருக்கிறார்கள். இது நூற்றுக்கணக்கான குழாய்க் கிணறுகளி லிருந்து தண்ணீர் இறைக்கிறது. 'அதிக உணவுப் பொருட்களைப் பயிரிடுங்கள்' என்னும் இயக்கத்திற்கு இது பெரிதும் உதவுகிறது.

1942-ல் இந்தியா சாதித்த தென்ன?

மத்தியில் அரசாங்கக் கைத் தொழிற் சாலை; இங்கே தான் வெடி மருந்துகள் உற்பத்தியாகின்றன. இதைச் சுற்றிலும் பல தொழிற் சாலைகள் இருக்கின்றன. இவை ஒவ்வொன்றிலும், வெடி மருந்து செய்வதற்கான ஒவ்வொரு பொருள்கள் உற்பத்தியாகின்றன. இதனால் 1943-ம் வருஷங் கூட, இலாப முண்டு.

1942-ம் வருஷம் வெடி குண்டுகள் உற்பத்தி இரண்டு மடங்கு அதிகப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. பீரங்கிக்கு வேண்டிய சாமான்கள் 100-க்கு 30 வீதமும், துப்பாக்கிக் குண்டுகள் 100-க்கு 25 வீதமும், பீரங்கி குண்டுகள் 100-க்கு 50 வீதமும், சின்ன மிஷன் பீரங்கிகள் 100-க்கு 100 வீதமும் அதிகமாக உற்பத்தியாகி யிருக்கின்றன.

முக்கியமான செய் பொருள்களை இந்திய (வெடி மருந்து) கொள் முதல் பிரதம 'கன்ட்ரோலர்' 1942-ம் வருஷத்தில் ரூ. 5 269 லட்சத்திற்கு வாங்கி யிருக்கிறார். ஆனால் 1941-ம் வருஷத்தில் ரூ. 3,843 லட்சத்திற்கும், 1940-ம் வருஷத்தில் ரூ. 1,343 லட்சத்திற்கும் வாங்கினார். இதில், வெடி மருந்துகள் ரூ. 546 லட்சம், ஆயுதங்கள் ரூ. 318 லட்சம், இரும்புச் சாமான்கள் ரூ. 451 லட்சம், 'சையன்டிபிக்' சாமான்கள் ரூ. 64 லட்சம், மின்சாரப் பொருள்கள் ரூ. 257 லட்சம், 'நட்ஸ்' 'போல்ட்ஸ்' ரூ. 87 லட்சம், குழாய் வகையறுக்கள் ரூ. 242 லட்சம், 'மைனர் இஞ்சினீரிங் ஸ்டோர்ஸ்' ரூ. 103 லட்சம், 'ஜெனரல் இஞ்சினீரிங் ஸ்டோர்ஸ்' ரூ. 99 லட்சம் முதலியன.

1941-ம் வருஷத்தில் கட்டட வேலைகளுக்கும், கப்பல் கட்டுவதற்கும் ரூ. 398 லட்சம் பெறுமான பொருள்கள் வாங்கப்பட்டன. ஆனால் 1942-ம் வருஷத்தில் இது ரூ. 511 லட்சமாக உயந்தது.

1942-ம் வருஷத்தில் இந்தியத் தளவாட உற்பத்திச் சாலையில் மொத்தம் ரூ. 202 லட்சம் பெறுமான பொருள்கள் உற்பத்தியாகின. இந்தத் தொழிற் சாலைகளில் சுமார் 1 லட்சம் பேர்கள் வேலை செய்தனர்.

மொத்தம் இந்தியாவில் எவ்வளவு உற்பத்தியானது என்பது மேல்க் கண்ட புள்ளி விவரங்களி லிருந்து தெளிவாகும்:—யுத்தம் ஆரம்பமான, முதல் 16 மாதங்களில் மட்டும் சப்ளை இலாக்கா முன்பை விட 85 கோடி ரூபாய்க்கு அதிகமாக ஆர்டர்கள் கொடுத்தது; அதாவது 1941-ம் வருஷத்தில் 118 கோடி ரூபாய்க்கு ஆர்டர் கொடுத்தது. 1942-ம் வருஷத்தில் 223 கோடி ரூபாய்க்கும், 1943-ம் வருஷத்தின் முதல் 5 மாதங்களில் மட்டும் 142 கோடி ரூபாய்க்கும் ஆர்டர்கள் கொடுத்திருக்கின்றது.

பொதுத் திட்டத்திற்காக உழைக்க வேண்டும்.

நம் வீட்டில் ஒரு மோட்டார் கார் இருப்பதாக வைத்துக் கொள்ளுவோம். அதை மிதமாக உபயோகித்தால் தான், அது தகுந்தபடி உழைக்கும். இல்லாவிட்டால், விரைவில் பழுதாகிவிடும். அதுபோலவே நாட்டு முயற்சிகளுக்குத் தான் சலுகை அதிகமாகக் காட்டப்பட வேண்டுமே யொழிய, தனிப்பட்டவர்களுக்கல்ல. ஒவ்வொரு நாட்டிலும் எவை எவை உற்பத்தியாகின்றன; பிற நாடுகளிலிருந்து எவை எவை இறக்குமதி செய்கிறது; பிற நாடுகளுக்கு என்னென்ன ஏற்றுமதி செய்கிறது; கிடைக்கக்கூடிய பொருள்களை எந்தெந்த வழிகளில் பயன்படுத்துகிறது, ஆகியவற்றை நாம் ஆராய்ந்தால் வெற்றிபெறும் பொருட்டு உலகம் முழுதும் என்ன முயற்சி செய்துகொண்டிருக்கிற தென்று விளங்கும்.

1942-ம் வருஷ ஆரம்பத்தில் 'க்ராடி மிஷன்' இந்தியாவிற்கு வந்தது. அதையடுத்து, ஆங்கிலோ-அமெரிக்கன் 'மிஷன்' வந்தது. இந்தியாவின் மேற்குக் கரையிலுள்ள துறைமுகங்களின் நிலைமையைக் குறித்தும் கப்பல் போக்கு வரவுகளைக் குறித்தும் விசாரணை செய்வது தான் இந்த 'மிஷனு'டைய வேலை. சமீபத்தில் ஆங்கிலோ-அமெரிக்க கூட்டு எ.ஃ.கு 'மிஷன்' கூட வந்தது. இந்த 'மிஷன்'களின் வரவினால், இந்நாட்டவர்களின் பிரச்சினைகளைப் பரஸ்பரம் உணர்ந்து கொண்டு பரிபூரண வெற்றியடைவதற்குத் தக்க திட்டம் வகுக்கப் பெரிதும் உதவுகிறது.

இந்தியாவின் யுத்த உற்பத்திகளை அதிகப் படுத்தும்பொருட்டு, இயந்திரங்களையும், மற்ற சாமான்களையும், நிபுணர்களையும், பிரிட்டனும் அமெரிக்க ஐக்கிய நாடுகளும் கொடுத்து உதவியிருக்கின்றன. குத்தகைக் கடன் திட்டப்படி, இந்தியா கொடுக்கவும் செய்கிறது, வாங்கவும் செய்கிறது. இதனால் நேச நாடுகளின் கூட்டு முயற்சிக்கு மிகவும் வசதி ஏற்படுகிறது.

யுத்தம் இன்னும் நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே, யுத்தத் தளவாடங்கள் பழுதாகாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். பழுதாகிறவற்றைச் சீர்திருத்த வேண்டும். இப்போது நாம் தாக்கப் போகிறோமாகையால், இப்படிப்பட்ட வேலைகள் அதிகமாக நடைபெறும்படி நேரலாம். ஆகவே, இந்த வேலைகளைப் பெருக்குவதற்கு இந்தியாவில் திட்டமிடப்பட்டிருக்கிறது.

சமாதான காலத்தில் படைகளுக்கு ஆட்கள் சேர்க்கப்பட்டதைப்போல, ஒவ்வொரு கால் வருஷத்திலும் இரட்டிப்புப் பங்கு ஆட்கள் சேர்க்கப்பட்டனர். இந்தியாவில் உற்பத்தியாகும் பொருட்களில் பெரும்பகுதி, இந்தியாவின் தேவைகளுக்கே பயன்படுகின்றன. யுத்தம் ஆரம்பித்தது முதல், 1942-ம் வருஷம் ஜூன் மாதம் 30-ம் தேதி வரை, துப்பாக்கிக் குண்டுகள் 15 கோடி 'ரௌண்டு'களும், 7½ லட்சம் 'ஷெல்' குண்டுகளும், 9 லட்சம் திரிகளும் இந்தியாவிலிருந்து வெளி நாடுகளிலுள்ள போர்முனைகளுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன.

வடாப்பிரிக்காவில் 2½ வருஷகாலம் யுத்தம் நடந்தபோது பெரும்பாலும் எல்லா சப்ளைகளும் இந்தியாவிலிருந்து தான் அனுப்பப்பட்டன. மத்திய கிழக்குப் போர்முனையிலிருந்த படைகள் அணிந்திருந்த உடைகளும் பாதரட்சைகளும் இந்தியாவிலிருந்து அனுப்பப்பட்டவை. அங்கே உபயோகப்படுத்தப்பட்ட கூடாரங்களும் மரங்களும் 90 சத விகிதம் இந்தியாவிலிருந்து அனுப்பப்பட்டவை. இந்தியாவிலிருந்து தொடர்ச்சியாக 15 லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள ஸ்டோர்ஸ் சாமான்கள் அனுப்பப்பட்டன. ஒரே சமயத்தில் 7,000 டன் எ.ஃ.குத் தகடுகள் அனுப்பப்பட்டன. இதைக் கொண்டு டாங்கி எதிர்ப்புச் சுரங்க வெடிகள் செய்யவும், சுரங்க வெடிகளைச் செய்து விரவி வைக்கவும் முடிந்தது. அந்தக் கோடைகாலப் பாதுகாப்புப் போராட்டத்திற்கு இது மிகவும் உபயோகமாயிருந்தது.

சந்தர்ப்பத்திற்கு ஏற்றபடி, திறமையோடு நடந்துகொள்ளுவதில் இந்தியத் தொழிலாளிகள் கெட்டிக்காரர்கள். இந்திய கைத்தொழில் முதலாளிகள் புதிய துறைகளில் தம் கவனத்தைச் செலுத்த ஆவலா யிருக்கிறார்கள். ஜப்பான் கழுத்தில் போட்டிருக்கிற சுறுக்கு இறுகுகிறது. வெற்றி கிடைக்கிற வரை நேச நாட்டுப் படைகளின் தேவைக்கானவற்றை இந்தியா தன்னாலான மட்டும் திரட்டிக் கொண்டிருக்கிறது.

யுத்த நிலைமையும் இந்தியாவின் முயற்சியும்

செப்டெம்பர் மாதம் 3-ம் தேதி திருச்சி அகில இந்திய வானொலி நிலையத்திலிருந்து ராவ்பகதூர் என். ஆர். சாமியப்ப முதலியாரவர்கள் ஒலி பெருக்கிய பிரசங்கமாவது :—

இருண்டவானம். அடர்ந்த காட்டுப் பாதை. வழி நெடுக விதவிதமான பயங்கரச் சத்தம், மேகங்கள் மோதி, மின்னலும் இடியும் மிரட்டின. இந்நிலையிலே ஓர் அஞ்சா நெஞ்சன் எப்படியும், என் பிரயாணத்தை வெற்றிகரமாக நடத்தியே தீருவேன், வழி வளைந்து இருப்பினும், நச்சு அரவுகள் அங்கு நெளியினும், காட்டு மிருகங்கள் சீறினும், கடு மழை பெய்யினும், நான் கலங்கேன், களைத்துவிட மாட்டேன், பயந்து பின் வாங்கேன், முன்னேறியே தீருவேன் என்று கூறி நடக்க ஆரம்பித்தான். இடையே இடறிக் கீழே வீழ்ந்தான். கல்லும் முள்ளும் தைத்து உதிரம் பீறிட்டது. களைப்பு மேலிட்டது. ஆனால் அவன் புழுதியைத் தட்டி விட்டு, புண்ணைத் துடைத்துக் கொண்டு புறப்பட்டான். பாதையிலே விழியும், பிரயாணத்தை முடித்தே தீர வேண்டும் என்பதிலே நாட்டமும், அவனுக்கு ஊக்க மூட்டின. அவனுடைய அஞ்சா நெஞ்சத்தின் பலன் என்ன ? வெற்றி. இருண்டவானம் சில நேரத்திலே கொஞ்சம் வெளுக்கலாயிற்று. இடியும் மழையும் ஒய்ந்தது. துஷ்ட மிருகங்கள் பாதையிலே உலவாமல் புதர்களிலே பதுங்கின. பயமில்லை ஜெயமுண்டு மனமே என்று பாடிக் கொண்டே பிரயாணி நடக்கிறான்.

பயங்கரமான இப்போர் துவங்கிய போது பிரிட்டன், காட்டுப்பாதையிலே சென்ற வழிப்போக்கன் போல் இடர்ப்பட்டது. ஆனால், கலங்கா உள்ளம் கொண்ட கடலரசன் இன்று போர் பாதையிலே வெற்றி முரசு கொட்டிக் கொண்டு செல்கிறான். துஷ்ட மிருகங்கள் புதருக்குள் புகுந்தது போல, அச்சு நாட்டினர் ராணுவ முகாம்கள் அமைத்துக் கொண்டு பதுங்கிக் கொண்டுள்ளனர்.

டன்கர்க் தோல்வி என்ற ஒரு சம்பவம் உலகத்தையே மருட்டி விட்டது. பிரிட்டன் இனி, பிடி சாம்பல் என்று கூறினர் பலர். நாஸிகளின் வெற்றியைத் தடுப்பார் இந்த நானிலத்திலே கிடையாது என்று கூறினர் சிலர். யாருக்கும் ஒரளவு திகிலாகவே இருந்தது, பிரிட்டிஷ் படைகள் டன்கர்க்கிலிருந்து பின் வாங்கிய போது.

அன்றும் இன்றும்

அன்று இருந்த நிலைமைக்கும் இன்று இருப்பதற்கும் ஒப்பிட்டுப் பார்த்தால் தான் போர் நிலைமையும், போரின் போக்கும் உள்ளது உள்ளபடி தெரிய வரும்.

தோல்வி சாதாரணமாக, யாருக்கும் திகைப்பைத் தரும். ஆனால் பிரிட்டனுக்கோ புதிய ஜீவனை டன்கர்க் அளித்தது. சங்கடமும் சஞ்சலமும் யாருக்கும் சலிப்பை உண்டாக்கும். ஆனால் பிரிட்டனோ அறைத்த சந்தனம் மணப்பது போல, சங்கடத்தின் மேல் சங்கடம் நேரிட்ட போது, புதியதோர் எழுச்சியைப் பெற்றது. ஐரோப்பா எங்கும் நாஸிப் படைகள் நகைத்தபடி நடமாடின. கடலிலே ஜெர்மன் சப்மெரைன்கள், நாசத்தைக் கக்கிக் கொண்டிருந்தன. வானத்திலேயோ கொயரிங்கின் கோர விமானப் படை கொடுமையைப் பொழிந்து நாடு நகரத்தை மண் மேடாக்கிய படி இருந்தது. எங்கும் பீதி, எங்கும் குழப்பம். எத்தனையோ அரசுகள் கவிழ்ந்தன. இந்தப் பயங்கர பின்னணிக் கீதத்துடன் சேர்ந்து ஒரு நாதம் கிளம்பிற்று. நான் வெல்வேன், நாஸியை ஒழிப்பேன் என்று பிரிட்டன் நாதம் கிளம்பிற்று, முடியுமா வென்று சந்தேகித்தவர்கள் டன்கர்க்குப் பிறகு இது வரை நடை பெற்றிருக்கும் நிகழ்ச்சிகளைக் கவனித்தால், சந்தேகம் தெளியும்.

பிரிட்டன் பிரமாதமான ஜெர்மன் விமானத் தாக்குதலைச் சமாளித்து விட்டது. ஜெர்மன் சப்மெரைன் செய்து வந்த சேஷ்டையை ஒடுக்கிவிட்டது. ஜெர்மன் துருப்புகள் பிரிட்டன் மீது பாய முடியாதபடி பிரிட்டன இரும்புக் கோட்டையாகி விட்டது.

இந்த தற்பாதுகாப்பு மட்டு மல்ல, எதிரியின் இடுப்பை முறிக்கும் சக்தியை பிரிட்டன் வளர்த்து விட்டது. விமானப் படையும் கப்பற்படையும், தரைப் படையும் பிறவும் இப்போது பிரிட்டனைப் பாதுகாக்கக் கூடிய அளவு மட்டு மல்ல, பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைக் காப்பாறறக் கூடிய வல்லமையுடையதாக மட்டு மல்ல, ஐரோப்பிய சிறு நாடுகளை, நாஸியின் கொடுங்கோலாட்சியி னின்றும் மீட்கவும், நாஜீச பாஸிஸ வெறியைப் பூண்டோடு ஒழிக்கவும் போதுமான வலிமையும் வகையும் உடையதான படை திரண்டு விட்டது.

நாஜி சர்வாதிகாரிக்கு நுறை தள்ளுகிறது

ஐரோப்பாவிலே அட்டகாசம் செய்து வந்த நாஜீப் படைகள், ரஷ்யா மீது படை யெடுத்தது நாஜியின் நாச காலத்துக்குத் தாம்பூலம் பெற்றது போலாகி விட்டது. வாரக் கணக்கிலே, மாதக் கணக்கிலே ரஷ்யாவை முடித்துவிட முடியும் என்று பேசிய ஜெர்மன் சர்வாதிகாரிக்கு வருஷம் நான்காகியும், வாயில் நுறைத் தள்ளுகிறதே ஒழிய வம்பை விலை கொடுத்து வாங்கிக் கொண்டோம் என்று விசாரம் மேலிடுகிறதே ஒழிய, ஆப்பை அசைத்த குரங்கு வாலறுபட்ட கதை போலாயிற்றே என்று வேதனைப்படவேண்டி நேரிட்டதே யொழிய வெற்றி கிட்டவில்லை. மாஸ்கோவின் வாயிற்படி வரை சென்ற நாஜிகள் இன்று மாஸ்கோவுக்கு வெகு தூரத்திலே தாங்கள் பிடித்த பல நகர்களிலே மீண்டும் செங்கொடி பறக்கிறது கண்டு சோர்ந்து, பின் புறமாக வேகமாக ஓடி ஓடி அலுத்து கார்காப் கோட்டையிலாவது காலந் தள்ளுவோம் என்று எண்ணி, அதுவும் முடியாது போனதால் கார்காபையும் இழந்து, யுக்ரைன் முழுவதும் கைவிட்டுப் போய் விடும் என்று நடுங்கிக் கொண்டுள்ள நாஜிப் படைகள், நிலை குலைந்து நினைப்பு கெட்டு, நீரொழுகும் கண்களுடன் நீப்பர் நதிக்கரை யோரத்திலே, இன்று கண் ணிழந்து, பல் விழந்து, சக்தி யிழந்த புலி, பழைய உறுமலை மட்டும் இழக்காமல், உறுமிக் கொண்டு உலவுவது போல் உலாவுகின்றன. கார்காப் வெற்றியை, மாஸ்கோ, விழாவாகக் கொண்டாடி 324 மரியாதை வேட்டுக்கள் கிளப்பிற்று. வெற்றி உற்சாகத்துடன், ரஷ்யப் படைகள் ஸ்டாலினோ முதலிய இடங்களைப் பிடிக்க வேகமாகப் பாய்ந்து வருகின்றன.

பிரிட்டன், ரஷ்யாவுக்குப் போர்ப் பொருள் உதவிக் கொண்டே, ஜெர்மன் கொள்ளைக் குண்டு வீச்சினால் தவிடு பொடியாக்கி, ஜெர்மன் யுத்த முயற்சியைக் குலைத்து வருகிறது. பல முறை பெர்லின், ஹாம்பர்க் முதலிய பட்டினங்கள் குண்டு வீச்சால் குமுறின,

டன்கர்க்குக்குப் பிறகு 3 காரியங்கள்

ஆக படை யெடுப்பைத் தடுத்தது ஒன்று, ரஷ்யாவுக்கு உதவியது இரண்டு, ஜெர்மன் யுத்த முயற்சியைக் குலை கக் குண்டு வீச்சு முறையைக் கையாண்டது மூன்று. ஆக இந்த மூன்று காரியங்களும், டங்கர்க் தோல்விக்குப் பிறகு பிரிட்டன் சாதித்தவை.

அது மட்டுமா? அபிசீனியாவிலே அட்டகாசம் புரிந்த இத்தாலி ஆட்சி எங்கே? லிபியா பாலைவனத்திலே நாஸிச, பாஸிச கூட்டுக்கொள்ளைக் காரர் கொட்டம் என்னவாயிற்று ? நைல் நதிக்கரை வரையிலே சென்று ஈஜிப்டை ஒழித்து சூயஸ் கால்வாயைப் பிடிப்பேன் என்று சூள் உரைத்த சூரன் ரோமலும் அவனுடைய சூறுவளிப் படையும் எங்கே ? வட ஆப்பிரிக்காவிலே வட்டமிட்ட நாஜி விமானங்கள் எங்கே போயின ? இக்கேள்விகளுக்குப் பதில் கூற அச்சு நாட்டாரோ, அவர்களின் அடிவருடிகளோ கூறுவர். வட ஆப்பிரிக்காவின் சக்கரவர்த்தி என்ற பட்டமும் விருதும் சூட்டிக் கொண்டிருந்த இத்தாலி மன்னருக்கு, இன்று ஒரு பிடி மண்ணும் ஆப்பிரிக்காவிலே சொந்த மில்லை. ஆப்பிரிக்காவிலே அமைக்கப்பட்டிருந்த இத்தாலிய சாம்ராஜ்யம், அபிசீனியா, எரிட்ரியா, லிபியா என்ற மண்டலங்களை இன்று நேச நாட்டுப் படைகள் இத்தாலிக் கொடுங்கோலாட்சியிலிருந்து விடுவித்தன. முடியிழந்த அபிசீனிய மன்னர் மீண்டும் முடி தரித்து நாடாளுகிறார். லிபியா போரிலே பல இலட்சம் அச்சுப் படை நாசமாயின, பல இலட்சம் சிறைபட்டனர். பொருள் நஷ்டம் ஏராளம். ஆப்பிரிக்காவிலே நேச நாட்டினர் அடைந்த வெற்றி மகத்தானது, அச்சு நாட்டினரின் கொட்டத்தை அடக்க இந்த வெற்றி பெரிதும் உதவிற்று.

மூன்று வருஷங்களுக்கு முன் ஆர்ப்பரித்த முசோலினின் கதி என்ன ?

உலகம் புகழும் வீரனாக முன்பு விளங்கி பெரிய பெரிய சாம்ராஜ்யங்களைச் சிருஷ்டித்த ஜூலியஸ் ஸீசர் பிறந்த நாட்டிலே பிறந்ததால் தானும் ஹிட்லரின் கையாளாக விருந்து உலகையே ஆளலாம் என்று மமதை கொண்டான் முசோலினி. அவனுடைய பீடம் ஆப்பிரிக்காவிலே நேச நாட்டினர் தந்த அடியினால் ஆடிற்று. முசோலினி இன்று அரசிழந்து, முரசிழந்து, பேச்சிழந்து, பீடமிழந்து தலை மறைய வேண்டி நேரிட்டு விட்டது. மூன்றாண்டுகளுக்கு முன்பு முசோலினி எவ்வளவு ஆர்ப்பரித்தான். இப்போது என்ன கதியில் இருக்கிறான்.

மத்திய தரைக்கடல், இத்தாலியருக்கு ஒரு பெரிய ஏரி. அது எங்களிடமே தான் இருக்க வேண்டும் என்று இறுமாப்புடன் இத்தாலி சர்வாதிகாரி கதறினார். மத்தியதரைக் கடலிலே உள்ள தீவுகளைக் கடற்கோட்டையாக்கி, அங்கு முகாம் அமைத்துக் கொண்டு 9 நேச நாட்டினர் மத்திய தரைக் கடலிலே நடமாட முடியாதபடி நாச வேலைகள் செய்து கொண்டிருந்தனர் அச்சு நாட்டினர்.

ஆனால், சென்ற மாதம் அவர்களின் செருக்கு அழிக்கப்பட்டு விட்டது. பிரிட்டிஷ் பிரதம மந்திரி மிஸ்டர் சர்ச்சிலும், அமெரிக்க ஜனாதிபதி மிஸ்டர் ரூஸ்வெல்டும் கசபிளாங்கா என்ற இடத்திலே கூடிப் பேசிப் போர்த் திட்டம் வகுத்தனர்.

அதன் பயனாக நேச நாட்டுத் துருப்புகள் சிசிலி என்ற தீவின் மீது பாய்ந்தன. இத்தாலிய ஜெர்மன் துருப்புகள் காட்டிய எதிர்ப்பு பயனின்றிப் போயின. 38 நாட்களிலே சிசிலி நேச நாட்டினரிடம் சரண் புகுந்தது. அங்கிருந்த அச்சுப் படைகள் தலை தப்பினால் போதும் என்று ஓடிவிட்டன.

எந்த மத்யதரைக் கடலிலே நேச நாட்டினர் தலைக்காட்ட முடியாது என்று அச்சு நாட்டினர் கூறினரோ, அதே மத்யதரை கடலிலே பிரமாண்டமான நேச நாட்டுப் போர்க் கப்பல்கள் தயாராக நிற்கின்றன.

பிரிட்டனி; மனோ திடத்தின் பலன்

இத்தாலியிலே இருட்டடைப்பு, பால்கன் நாடுகளிலே பதைப்பு, ஜெர்மனியிலே பீதி. நாஜிகளிடம் பிடிபட்ட நாடுகளில் எல்லாம் புயல் வாடை அடித்தபடி இருக்கிறது. யாரைப் பார்த்தாலும், ஜெர்மானியருக்குப் பயமாக இருக்கிறது. அடக்கு முறைகளை அதிகமாக உபயோகிக்கின்றனர். நார்வே பக்கமாக வந்து விடுவார்களோ, பிரான்ஸ் வழியாகப் பாய்வார்களோ, இத்தாலியைப் பிடித்துக் கொண்டு அவ்வழியாக வருவார்களோ என்று ஹிட்லருக்கு யோசனையும் கலக்கமும் ஏற்பட்டு விட்டது. இந்நிலையிலே நேச நாட்டு விமானங்களோ ஓர் நாள் தவறாமல் அச்சு நாட்டுத் தளங்களைத் தாக்கியபடி உள்ளன. எந்த நேரத்திலே எப்பக்கம் இருந்து படை யெடுப்பு நேரிடுமோ; படை யெடுப்பு நேரிட்டால் என்ன செய்வது என்று ஏக்கத்துடனும், துக்கத்துடனும் மூன்றாண்டுகளுக்கு முன்னர் பிரிட்டன் கவலை கொண்டிருக்க வேண்டிருந்தது இன்றோ அந்த ஏக்கமும் கவலையும் அச்சு நாடுகளுக்கு ஏற்பட்டு விட்டன. இந்த மகத்தான மாறுதல் பிரிட்டனின் மாபெரும் மனோ திடத்தின் பயனாக உண்டானதாகும்.

குயுபெக்கில் சர்ச்சில்—ரூஸ்வெல்டு சந்திப்பு நடைபெற்று, அச்சு நாட்டினரை அழித் தொழிக்கத் திட்டம் தயாரிக்கப்பட்டு விட்டது. ஐரோப்பா மீது பல வழிகளில் படை யெடுப்பு நடத்துவது, விமானத் தாக்குதலை அதிகப்படுத்துவது, ரஷ்யா, சீனாவுக்கு உதவியை மேலும் அதிகமாக அளிப்பது என்பன போன்ற முக்கியமான தீர்மானங்கள் குயுபெக் மஹா நாட்டிலே செய்யப்பட்டன.

அவற்றைத் தெளிவாகக் கூற முடியாது. ஆனால் அச்சு நாட்டினர் புரிந்து கொள்ளக் கூடிய பாஷையிலே குயுபெக் மஹா நாட்டு முடிவுகளை நேச நாட்டுப் படைத் தலைவர்கள் விரைவிலே தெரிவிப்பார்கள் என்று கனடா பார்லிமெண்டிலே அமெரிக்க ஜனாதிபதி கூறினார். ஆனந்த ஆரவாரத்துடன் இச்செய்தியை கனடியர் வரவேற்றனர்.

இன்று காலை வந்துள்ள செய்திகளும் இதை நிரூபிக்கிறது. இன்று அதிகாலையில் ஜெனரல் ஐஸன்ஹோவர் தலைமையின் கீழ் பிரிட்டிஷ் 8-வது சேனையைச் சேர்ந்த துருப்புகளும், கனடியப் படையினரும் இத்தாலியில் இறங்கி கடும்போர் துவக்கி விட்டதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

மற்றோர் முக்கியமான தீர்மானமும் குயுபெக்கிலே செய்யப்பட்டிருக்கிறது. கிழக்கத்தி நாஜியான ஜப்பானின் கொட்டத்தை அடக்கி, பிடிபட்ட மலாய், பர்மா ஆகியவற்றினை விடுவிக்கவும் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

(8-ம் பக்கம் பார்க்க)

"கோதாவரி" வழி காட்டுகிறது

மன்னர் கப்பற் படைக்கு முன்பு போவது இந்திய கப்பல்

இங்கிலாந்திலுள்ள கப்பற் படைக்கு மாட்சிமை தங்கிய மன்னர் பிரான் விஜயம் செய்ததுபற்றி, கமாண்டர் ஆந்தனி கிமின்ஸ் ஆர். என். ஒரு ஒலி பெருக்கிப் பிரசங்கம் செய்தார். அப்போது அவர் கூறியதாவது:— மன்னர் பிரான் விஜயம் செய்தார். தன் நண்பர்களை மீண்டும் அவர் சந்தித்தார். அவர் சென்ற விட மெல்லாம் தம் நண்பர்களை மீண்டும் கண்டார். சென்ற மகா யுத்தத்தின் போது இவர் சேவகம் 'மலேயா' என்னும் கப்பலிலும், நமது கப்பற் படையைச் சேர்ந்த நாசகாரிகளிலும், இரேக்க நாசகாரிக் கப்பலான 'தெமிஸ்டாக்கின்ஸ்' கனடியக் கப்பலான 'ஹூரன்' இந்திய கப்பற் படையைச் சேர்ந்த நீர் மூழ்கிக் கப்பலான 'கோதாவரி' ஆகிய கப்பல்களிலும் தன் நண்பர்களை அவர் மீண்டும் கண்டார்.

உலகத்தின் பல பாகங்களிலிருந்தும் ஆயிரக் கணக்கான மைல்கள் தாண்டி, ஆஸ்திரேலியர்களும், கனடியர்களும், தென் ஆப்பிரிக்கர்களும் இங்கிலாந்திலுள்ள கப்பற் படையில் சேர்ந்து உழைக்கும் பொருட்டு வந்திருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் 'கோதாவரி' என்னும் கப்பலில் கூடியிருந்த காட்சி மிகவும் ரம்மியமாயிருந்தது. அவர்களுடைய முகங்கள் மகிழ்ச்சியால் மலர்ந்திருந்தன. அந்த குளிர் நாட்டிலுங் கூட சீக்கியர்கள் அணிந்திருந்த வெள்ளைத் தலைப்பாகைகள் மகா கம்பீரமான தோற்றத்தை யளித்தன.

இந்தக் கப்பலின் தோற்றத்தில் ஒரு சிறு குறை கூடக் கூறுவதற்கில்லை. தங்கள் கப்பலுக்கு இன்னார் விஜயம் செய்யப் போகிறார் என்ற செய்தியைக் கேட்டபோது, அங்கிருந்த மாலுமிகள் நம்பக் கூடவில்லை. அது உண்மையல்ல வென்றே நினைத்தார்கள். அனறிரவு முழுதும் தம் கப்பலைச் சுத்தம் செய்து மெருகு கொடுத்துக் கொண்டிருந்தனர். மாட்சிமை தங்கிய மன்னர் பிரான வந்த போது, ஆதி முதல் அந்தம் வரை அது ஒரு கண் கொள்ளாக் காட்சியாயிருந்தது.

மாட்சிமை தங்கிய மன்னர் பிரான் அக்கப்பலை விட்டு இறங்கிய போது, நான் வேண்டுமென்றே கப்பலிலேயே இருந்தேன். மாலுமிகள் மன்னர் பிரானை வாழ்த்துவதை அருகிலிருந்து கேட்க வேண்டு மென்று விரும்பினதால் தான் நான் அங்கேயே இருந்தேன். மும்முறை மன்னர் பிரானை வாழ்த்தினார்கள். அந்த வாழ்த்துக்களின் நுட்பத்தை வர்ணிக்க என்னால் முடியாது. மன்னர் பிரானுடைய கப்பல் புறப்பட்ட உடனே, கலைந்து போகும்படி மாலுமிகளுக்குக் கட்டளை பிறந்தது. என்றாலும், அவர்கள் தாம் இருந்த இடத்தை விட்டுப் பெயரவே இல்லை. மன்னர் பிரான் ஏறிச் சென்ற கப்பல் தலை மறைகிற வரை வாழ்த்துக் கூறி குதூகலித்துக் கொண்டிருந்தார்கள்.

மறு நாள் மன்னர் பிரானின் கப்பற் படை கிளம்பியபோது, முதலில் புறப்படும் பாக்கியம் நம் 'கோதாவரி'க்குக் கிடைத்தது. நடுக் கடலுக்கு அது போன வுடனே "மன்னர் பிரான் நீடூழி வாழ்க" என்னும் பொருள் தரும் கொடியைப் பறக்க விட்டனர். அதன் பக்கத்தில் மாலுமிகள் நின்று கொண்டு மகிழ்ச்சிப் பெருக்கால் மிகுந்த ஆரவாரம் செய்தனர்.

அன்று கப்பற் படைக்கு ஒரு மகத்தான நாள். ஏனென்றால், சென்ற 600 ஆண்டுகளாக எந்த மன்னரும் தன் கப்பற் படையுடன் யுத்த காலத்தில் வெளிப் பட்டதே கிடையாது.

பொய் வதந்திகளுக்கு மறுப்பு

தானியக் கட்டுப் பாடு வேலை செய்யும் முறை

இந்தியாவி லிருந்து, குறிப்பாக வங்காளத்தி லிருந்து ஏராளமான தானியங்கள் ஏற்றுமதியாகிறதாக பத்திரிகைகளில் இன்னும் செய்திகள் வெளி வந்து கொண்டிருக்கின்றன. இது ஆதாரமற்றதோர் செய்தி. ஆகையால் பல காரணங்களைக் கூறி இதை மறுக்க, இந்தியா அரசாங்கத்தார் ஆசைப் படுகிறார்கள். இது சம்பந்தமாகச் சமீபத்தில் ஒரு அறிக்கை வெளி யிடப்பட்டது. அதில் 1942–43-ம் வருஷத்தில் இந்தியாவி லிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட தானியங்கள் 370,000 டன் என்றும், ஆனால் 1937–38-ம் வருஷத்தில் ஏற்றுமதியானது மொத்தம் 9 லட்சம் டன் என்றும் ஆகவே, ஏற்றுமதி படிப்படியாகக் குறைந்திருக்கிற தென்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. 1943-ம் வருஷ ஆரம்ப முதல், மாதந்தோறும் இந்தியாவி னின்று கீழ்க் கண்டவளவு தானியங்கள் ஏற்றுமதி செய்யப் பட்டன :—

1943.	கோதுமை.	அரிசி. டன்கள்.	மொத்தம்.
ஜனவரி	140	13.830	13,970
பிப்பிரவரி	166	19,058	19,224
மார்ச்சு	6	12,612	12.618
ஏப்ரல்	33	7,819	7,852
மே	216	5,479	5,695
ஜூன்	20,321	10,166	30.487
ஜூலை	283	2,008	2,291
	21,165	70,972	92,137

இலங்கை, பாரசீக வளைகுடாவிலும் ஆப்பிரிக்காவிலும் உள்ள துறைமுகங்கள் ஆகிய இந்தியர்கள் வசிக்கும் இடங்களுக்குத் தான் இவை ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அதே காலத்தில் வங்காளத்தி லிருந்து கடல் வழி யாகவும் ரயில் வழியாகவும் ஏற்றுமதியான அரிசி 7,000 டன்னுக்கு அதிகப்பட வில்லை. இதில் இந்தியாவை விட்டு வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியானது 3 000 டன்னுக்கு அதிகப்படாது. இது பெரும்பாலும் ஜனவரி மாதந்தான் ஏற்றுமதியானது. ஆனால் வங்காளத்தில் 70,000 டன் அரிசி இறக்குமதியானது. இந்த கணக்குப்படி பார்த்தால் வங்காளத்தில் அரிசி நிகர இறக்குமதி 63,000 டன்.

உணவுப் பொருள்களை இந்தியாவை விட்டு வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடாதென்று, இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின் 84-வது விதியின்படி ஒரு அறிக்கை வெளியாகி யிருக்கிறது. உணவுப் பொருட்கள் சர்க்கரை, ஏலம், லவுங்கம், சாதிக்காய், சாதிப்பத்திரி கால் நடைகளுக்கு வேண்டிய உணவுகள் கொள்ளு முதலியவற்றை ஏற்றுமதி செய்வதற்கு 'எக்ஸ்போர்ட் டிரேட் கன்ட்ரோலர்' அவர்களிடம் லைசென்ஸ் பெற வேண்டும். ஒவ்வொரு துறைமுகத்திலும் ஒவ்வொரு 'எக்ஸ்போர்ட் டிரேட் கன்ட்ரோலர்' இருக்கிறார். உணவு இலாகாவின் கட்டளைப்படியே தான் அவர்கள் 'லைசென்ஸ்' கொடுப்பார்கள். இந்தக் கட்டளைகள் நாட்டின் உணவு நிலைமையை யொட்டித் தான் விதிக்கப்படுகின்றன. இதன் பொருட்டு, உணவு நிலையைக் குறித்து சதா பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள். 1943-ம் வருஷம் ஜூலை மாதத்தி லிருந்து மிகமிகக் கொஞ்சம் பயறு வகைகள் தான் இலங்கைக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. இந்த உணவுப் பொருளைத் தவிர, வேறெதுவும் ஏற்றுமதி செய்யப்படவில்லை. அன்றியும் பயறுகள், கட்டுப்படுத்த பட்ட உணவுப் பொருட்க ளல்ல. வியாபாரக் கப்பல்களில் வேலை செய்யும் இந்தியர்களுக்குத் தேவையான அளவிற்கு மட்டுந் தான் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இப்படி சென்ற 8 மாதங்களில் ஏற்றுமதி செய்யப்படுவது, சில 100 டன்கள் மட்டுந்தான்.

'யுனைடெட் கிங்டம் கமர்ஷியல் கார்ப்பொரேஷன்' வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவது கட்டுப்படுத்தப்பட வில்லை யென்றும், அவர்கள் ஏராளமாக உணவுப் பொருள்களை ஏற்றுமதி செய்கிறார்க ளென்றும் கூறப்படுகிறது. இவர்கள் ஏற்றுமதிகள் அனைத்தையும் குறித்து இந்தியா அரசாங்கத்திற்குத் தெரிந்து தான் இருக்கிறது. 'லைசென்ஸ்' பெற்ற பிறகு தான் அவர்கள் ஏற்றுமதி செய்கின்றனர். சென்ற 12 மாதங்களில் எந்த வித உணவுப் பொருளையும் இவர்கள் ஏற்றுமதி செய்யவில்லை.

இந்த வருஷ ஆரம்பத்தில் ஆஸ்திரேலியாவில் இருந்து வந்திறங்கிய கோதுமைக்குப் பதிலாக, இந்தியாவி லிருந்து கோதுமையை ஏற்றுமதி செய்ய வேண்டி யிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இது உண்மையே யல்ல. இந்த வருஷ ஆரம்பத்தில் ஆஸ்திரேலியாவி லிருந்து கப்பல்கள் கோதுமையை ஏற்றிக் கொண்டு பல நாடுகளுக்கு வந்து கொண்டிருந்தன. அந்நாடுகளில் இந்தியாவும் ஒன்று. இந்தியாவிற்கு வந்து கொண்டிருந்த கப்பல்களில் மூன்று கப்பல்களை மற்றொரு நாட்டிற்குக் கொண்டு போகும்படி கட்டளை யிட்டனர். ஆனால், அக்கட்டளை, அக்கப்பல்களுக்குக் கிடைக்கும் முன்னதாகவே, அவை இந்தியா வந்து சேர்ந்து கோதுமையை இறக்கிவிட்டன. அதை விநியோகமும் செய்து விட்டார்கள். அவை அனுப்பப்பட வேண்டிய நாடுகள் உணவுப் பஞ்சத்தால் பெரிதும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, அந்த மூன்று கப்பல் சரக்குகளையும் ஈடு செய்யத்தக்க அளவிற்குக் கோதுமை ஏற்றுமதி செய்யப்படும்.

இயந்திரப் படகுகளைப் பற்றிய தகவல்கள், அரசாங்கத்திற்கு அறிவிக்க வேண்டும்.

இயந்திரங்களைக் கொண்டு ஓடுகிற படகுகளைக் குறித்த தகவல்களை இந்தியா அரசாங்கத்தார் திரட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

சென்ற ஜூலை மாதம் 31-ம் தேதி யுத்த இலாக்கா அறிக்கை யொன்று வெளி வந்தது. இது இந்தியப் பாதுகாப்புச் சட்டப்படி வெளியிடப்பட்ட அறிக்கை. இதன்படி, 15 நிகர டன்னுக்கு மேற்படாத இயந்திரப் படகுகளை வைத்திருக்கும் சொந்தக்காரர்களோ அல்லது அப்படகுக் கம்பெனி மானேஜ்மெண்டாரோ, முழு விவரங்களையும், நியூ டெல்லி, கப்பற் படைத் தலைமைக் காரியாலயம், இந்தியக் கப்பற்படைத் தலைவர் என்ற விலாசத்திற்கு அறிவிக்க வேண்டும். சொந்தக்காரரின் பெயர், முழு விலாசம், படகின் அளவு, வேகம், உள்ளடக்கம் முதலிய விவரங்கள் அனுப்பப்பட வேண்டும். இந்தத் தகவல் கொடுக்கப்பட வேண்டிய தேதியை அக்டோபர் மாதம் 1-ம் தேதி வரை தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது.

ஜூலை மாதம் 31-ம் தேதி வெளிவந்த அறிக்கையில் ஒரு படகின் முதலாளி, அதை யாருக்கேனும் மாற்றினால், முற்கூறிய தகவல்களைக் கொடுக்க இரு தரத்தாரும் பொறுப்புடையவர்கள். அப்படிப்பட்ட மாறுதல் ஏற்பட்டு 7 நாட்களுக்குள் இந்தத் தகவல்களை அனுப்பிவிட வேண்டும்.

அங்கும், இங்கும்.

திரும்பிப் பார்த்தல்!

1942-ம் வருஷம் ஆகஸ்டு மாசம் நிலைமை எப்படி யிருந்தது? இன்றைய நிலைமை எப்படி யிருக்கிறது என்று கவனித்துப் பார்த்தால், 'டேயப்பா!' என்று பிரமிக்கத்தான் வேண்டி வருகிறது. போன வருஷம் ஆகஸ்டு மாசத்திலே. வட ஆபிரிக்காவிலே, நைல்டெல்டா பிரதேசங்களுக்கும், பயங்கர ஜெர்மானியப் படைகளுக்கும் நடுவே, எல் அலாமீன் என்ற ஊரைப் பிடித்துத் தொங்கி கொண்டு கிடந்தார்கள், பிரிட்டிஷ் எட்டாவது சேனையைச் சேர்ந்த வீரர்கள். ஜெர்மன் படையால் துரத்தப்பட்டு, அயர்ந்து போய், அவஸ்தைப் பட்டுக் கொண்டு, ஆனாலும் நம்பிக்கையைக் கைவிடாது இருந்தார்கள் அந்த வீரர்கள்.

அப்பொழுது எல்லாம் ஜெர்மானியருக்கு சாதக மாகவே இருந்தது என்று ஒரு சீமைப் பத்திரிகையின் யுத்த நிருபர் எழுதி வைத்திருக்கிறார். ஜெர்மன் படையை யாராலும் தோற்கடிக்க முடியாது. ஜெர்மானிய சேனாபதிகள் மகா சூரர்கள். ஜெர்மானியர் தயாரிக்கும் யுத்தத் தளவாடங்கள் நம்மதை விட பல விஷயங்களில் சிறந்திருக்கின்றன. பிரிட்டிஷார் கை நிறைய கப்பி மண் என்கிற கதையாக சாமான்களின் அள்விலே தான் கவனத்தைச் செலுத்தினார்களே ஒழிய, அவற்றின் ரகத்தில் கவனத்தைச் செலுத்தவில்லை.

ஜெர்மானியரிடம் எத்தனை டாங்கிகள் இருந்தனவோ, அத்தனை பிரிட்டிஷாரிடமும் இருந்தன. ஆனால் பிரிட்டிஷ் டாங்கிகளில் உள்ள பீரங்கிகள் ஆயிரம் கஜம் தான் சுடும். நாஸி பீரங்கிகளோ ஆயிரத்து ஐந்நூறு கஜங்கள் சுட்டுக் கொண்டிருந்தன.

பிரிட்டிஷாரிடம் ஐந்நூறு ரக டாங்கிகள் இருந்தன. அதனால் அவற்றிற்கு வேண்டிய பாகங்களை எல்லாம் பிரிட்டிஷார் சுமந்து கொண்டு போக வேண்டி யிருந்தது. ஆனால், ஜெர்மானியரோ, முரட்டு ரகமாக மூன்றுக்குள்ளாகவே வைத்துக் கொண்டிருந்தார்கள்.

பெட்ரோல் கொண்டு போக, ஐந்து காலன்கள் பிடிக்கும்படியான தட்டையான, கல் போல் உள்ள 'கான்'களை வைத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் பிரிட்டிஷாரிடம் தகரத்தாலாகிய நாலு காலன் டப்பாக்கள் தானிருந்தன. அவை வரும் வழியிலேயே நசுங்கி, சட்னி யாகி, உரு மாறிக் கொண்டிருந்தன.

விரோதியிடம் உள்ள சாமான்கள் ரொம்ப ஒஸ்தியானவை என்ற விஷயத்தை அறிந்த நமது படையினர் உள்ளத்தில் பீதியும், கவலையும், சோர்வும், உற்சாகக் குறைவும் தோன்றின. படை வீரர்களிடை பிரசாரமும் அதிகமாக நடக்க வில்லை. ஜெர்மானியருக்கு புத்தப் புது படங்கள் போட்ட பத்திரிகைகள் விநியோகிக்கப்பட்டு வந்தன. பிரிட்டிஷாருக்கு மாசக் கணக்கில் பழசான பத்திரிகைகள் கிடைப்பது கூட கஷ்டமாக இருந்தது.

ஒரே பிரமிப்புத்தான்!

இதை யெல்லாம் இப்பொழுது திரும்பிப் பார்த்து விட்டு, தற்சமயம் அதே எட்டாவது சைனியம் என்ன செய்கிறது என்பதை கண்ணெடுத்து நோக்கினால், நம் உள்ளத்திலே ஒரே பிரமிப்பு மயமாகத்தான் நிரம்பிப் போய் விடுகிறது.

தெள்ளிய ஆலின் சிறு விதை பார்வைக்கு மீன் முட்டையை விடச் சிறியதாக இருந்தபோதிலும், அணி தேர் புரவி ஆட் பெரும் படை யொடு மன்னர்க்கு இருக்க நிழல் தரும் பிரமாண்டமான ஆல விருக்ஷமாக வளருகிறதல்லவா? அதே போலத்தான், அடி பட்டு நொறுங்கி அப்பளாம் போல் ஆவதற் கிருந்த அதே சிறு படைதான், பிரம்மாண்டமான சைனியமாக வளர்ந்து, வட ஆபிரிக்கா மண்ணிலிருந்தே அயோக்கிய ஜெர்மானியரையும், இத்தாலியரையும் விரட்டி யடிக்கும் சக்தியைப் பெற்று விட்டது.

அதோடு நின்றதா? அதே படை மத்ய தரைக் கடலைக் கடந்து. ஸிஸிலியில் ஜமாய்த்துத் தள்ளிற்று. இந்த யுத்தத்திலேயே மிகக் கடுமையான எதிர்ப்பைப் பெற்ற படை அதுதான். ஆனால், இந்த யுத்தத்திலே அந்தப் படைக்குத்தான் அதிகப் புகழ்.

ஸிஸிலி ஆயிற்று! அடுத்தாபோல, அசல் ஐரோப்பாவில் ஒரு பகுதியான இத்தாலியில் முதன் முதல் போய் இறங்கி முன்னேறிக் கொண்டிருக்கும் பெருமையில் இதே எட்டாவது படைக்கு சரியான பங்கு உண்டு.

நம் நிலைமை உயர்ந்து விட்டது.

இந்தப் படையிலும் சரி, பொதுவாக பிரிட்டிஷ் சைனியங்களிடையும் சரி, முன்பிருந்த குறை பாடுகளில் அநேகமாக எல்லாம் அகற்றப்பட்டு விட்டன. பல விஷயங்களில் நமது விரோதிகளை விட நாம் ஒஸ்தியாகி விட்டோம். முக்கியமாக விமான உற்பத்தி அளவிலும், விமானங்களின் சக்தியிலும் நாம் இன்று உயர்ந்திருக்கிறோம். இப்பொழுது புதிதாகத் தயாரிக்கப்படும் வெடி குண்டுகளும், பீரங்கிகளும், டாங்கிகளும் மகா சக்தி வாய்ந்தவையாக இருக்கின்றன. அச்சு நாட்டாரின் அகந்தையை ஒடுக்கி, ஜெர்மானியரின் பிடியில் சிக்கி அல்லல் படுவோரின் அகங்களிலே நம்பிக்கை ஊற்றெடுக்கும்படி செய்து விட்டனர் நேச தேசத்தார். வெற்றிப் பாதையில் சரியானபடி திரும்பி விட்டது நேச தேச ரதம். இனிமேல் கடுகளவு பயமும் இல்லை.

இதனால் இனி நேச தேசத்தாருக்கு கஷ்ட நஷ்டப் படலம் கிடையாது என்று சொல்லி விட முடியாது. எத்தனையோ இடைஞ்சல்கள் ஏற்படலாம். ஏகப்பட்ட நஷ்டங்கள் உண்டாகலாம். வெற்றிப் பாதை ரோஜா மலர் தூவிய பாதையாக இருக்குமா என்ன? வழியில் தோன்றும் முட்டுக் கட்டைகளை அப்புறப்படுத்திக் கொண்டு போகப் போக வெற்றி மூட்டை பெரிதாகி வரும். கடைசியில் இணை யில்லாத சுகம் வரக் காத்திருக்கிறது. அப்பொழுது திரும்பிப் பார்த்தால், 'என்ன ஆச்சரியம்!' என்றே எண்ணத் தோன்றும். எல் அலாமீனில் ஆரம்பித்த வெற்றிச் சங்கிலிக்கு மூல காரணம் பிரிட்டிஷாரின் இடைவிடா முயற்சியும், இயக்கும் சக்தியும் தான் என்று உலகமே இப்பொழுது புகழுகிறது! வட ஆப்பிரிக்காவிலும், ஸிஸிலியிலும் புகழ் மாலை சூடிய பிரிட்டிஷ் எட்டாவது சேனை இத்தாலிய மண்ணிலே சாதிக்கப் போகும் காரியங்களை உலகமே கவனித்துக் கொண்டிருக்கிறது.

அடிமேலடி!

பாவம்! ஜெர்மானியர்கள் பாடு ருஷ்யாவிலே படுமோசமாக இருக்கிறது. அவர்கள் படும்பாடு நாய்கூடப் படாது. எங்கு திரும்பினாலும் இடியும் உதையும் என்றால், இவர்கள் தான் என்ன செய்வார்கள்? ஸ்டாலின் துரை வெகு ஊக்கத்தோடு, தாமே பிரதம சேனாபதியாக நின்று, ருஷ்ய யுத்தத்தை நடத்துகிறார். அவருக்கு, எதிர் கையில் ஹிட்லர் இருக்கிறார். இவ்விருவரில் ஸ்டாலினின் மூளைதான் பெரிது என்பது ருஜுவாகிக் கொண்டு வருகிறது.

ஹிட்லர், ஸ்மாலனஸ்க் என்ற ஊர் அருகே உள்ள காட்டிலே, ஒரு இடத்தை தமது தலைமை ஸ்தலமாகக் கொண்டிருந்தார். அந்த ஊரையே வளைத்துப் பிடிக்க ஸ்டாலின் ஆட்களை அனுப்பியிருக்கிறார். புயல்போல் கவிந்துகொண்டு முன்னேறிக்கொண்டிருக்கிறார்கள் அவ்வீரர்கள்.

யூக்ரேன் தான் ருஷ்யாவின் களஞ்சியம் என்பார்கள். அங்கு விளையும் கோதுமைக்கு அளவே இல்லை. இப்பொழுது அங்கே நாஸி, ருஷ்யப் பிணங்கள் குவிந்துகொண்டிருக்கின்றன. அருமையாக வளர்க்கப் பெற்ற கோதுமைப் பயிரிடை வெடிகுண்டுகள் வெடிக்க, அப்பயிர்கள் வானத்தில் தூக்கி எறியப்படுகின்றன. ருஷ்யர்கள் ஸ்டாலின் கிராடிலிருந்து ஜெர்மானியரைத் துரத்தத் தொடங்கினார்கள். இப்பொழுது யூக்ரேனில் ஜெர்மானியர் பின்வாங்கி ஓடுகிறார்கள்.

இதற்கு நடுவே, செஞ்சேனை வீரர்கள் டாகன்ராக் என்ற முக்யமான நகரை வெகு எளிதில் கைப்பற்றிவிட்டார்கள். சுற்றி வளைக்கும் அவர்களது புது முறை நல்ல வெற்றியை அளித்து வருகிறது. அவர்களது பிடி நருங்கு முன், போட்டது போட்டபடியே விட்டுவிட்டு, ஆள் தப்பினால் போதுமென்று அலறிக்கொண்டு ஓடிவிடுகிறார்கள் நாஸி வீரர்கள். இதனால் ருஷ்யர்களுக்கு நல்ல வரும்படி. ஆயுத சாலையிலிருந்து வர வேண்டியவை, போர்க்களத்திலேயே கிடைப்பதானால் எவ்வளவு சந்தோஷமாக இருக்கும்!

டாகன்ராக் அருகிலே நடந்த போரிலே, நாஸிகளில், பதினாயிரக் கணக்கில் ஈக்கள்போல் விழுந்து மடிந்தார்களாம். இன்னும் பலர் ருஷ்ய இடுக்கில் சிக்கிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களை எல்லாம் மெதுவாகக் 'காலி'யாக்கிக் கொண்டிருக்கிறது செஞ்சேனை.

இன்னொரு ருஷ்யப்படை கார்கோப் நகருக்கு நூறு மைல்களுக்கு மேற்கே சென்றுவிட்டது. பிரயான்ஸ்க் என்ற மற்றொரு முக்யமான நகரத்திற்கு தெற்கிலும் ருஷ்யர்கள் முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். ஜெர்மானியரும் என்னென்னமோ தான் செய்து பார்க்கிறார்கள். ஆனால் பலிக்கவில்லை.

பழைய காலம் திரும்பாதையா!

முன்பு அடிப்பட்டார்களே ருஷ்யர்கள், அதே கதை திரும்பாதா என்று பார்க்கிறார்கள். திரும்பாதையா திரும்பாது! இன்னும் சிலகாலம் கழித்து ருஷ்யாவில் உள்ள ஜெர்மன் படைகள் திரும்பிப் பார்த்தால், ஜெர்மன் மண் தெரிந்தாலும் தெரியும். அதுவரை ருஷ்யர்கள் நிற்பார்கள் என்று தோன்றவில்லை.

அவர்களது குதிரைப் படையும், மோட்டார்ப் படையும் இன்று தென் ருஷ்யாவில் சாதிக்கும் சொல்கள் பல. திடீர் திடீரென்று அவை தோன்றி ஜெர்மானியரைத் தடுமாடி விழச் செய்துவருகின்றன. ஜெர்மானியர் ஒரு இடத்தில் இரண்டு நாட்களாவது ஸ்திரமாக நின்று, காலை ஊன்றிக் கொண்டு, போராடினார்கள் என்பது இல்லை.

இதுவரை, ருஷ்யா, தான் இழந்த பிரதேசங்களில் மூன்றிலொரு பகுதியைத் திரும்பப் பெற்றிருக்கிறது. ருஷ்யாவை அயோக்யத்தனமாக அபகரிக்க முயன்ற பயல்களை விரட்டியடிக்கும்வரை விடப்போவதில்லை என்ற சங்கல்பத்தை ஒவ்வொரு ருஷ்யனும் செய்துகொள்ள வேணுமென்று ஸ்டாலின் உபதேசம் செய்தார். அந்த உபதேசம் நன்றாக வேலைசெய்யத் தொடங்கிவிட்டது என்று தோன்றுகிறது.

ஹிட்லர் வரவர, ருஷ்யாவில் பரந்து உள்ள தமது படைகளை ஒன்று கூட்டுகிறார். போர்முனையின் நீளம் ஆரம்பத்திலே இரண்டாயிரம் மைல்களிருந்தன. ஆனால் அது இப்பொழுது ஐந்நூறாகச் சுருங்கிவிட்டது. அதை இன்னும் குறுகச் செய்தால், ஹிட்லர் ஆள் பஞ்சத்தைக் குறைத்தவராவார். வேறு போர்முனைகளுக்கு வேண்டுமானாலும் ஒரு பகுதியினரை அழைத்துக்கொண்டு போகலாம்.

ஆமாம்னா! சும்மா ஒரே மாதிரியாக செஞ்சேனைப் படைகளையே அவர்கள் எத்தனை நாட்கள்தான் பார்த்துக்கொண்டிருப்பது? தினம் வாழைக்காய்க் கறி என்றால் யாருக்கும் எரிச்சல் உண்டாகத்தானே செய்யும்? அத்தகைய எரிச்சல் நாஸிகளில் பலருக்கு ஏற்பட்டிருக்கலாம். ருஷ்யாவிலிருந்து நகர்ந்தால், ஜெர்மனிக்குப்போய் சுகமாகத் தூங்க முடியாது அவர்களால், வேறு எங்கேயாவது போய் போராடித் தொலைக்கவேணும். அது புது இடமாக இருந்தால், கொஞ்சம ஸ்வாரஸ்யமாகவாவது இருக்கும்!

ஸ்வாரஸ்யமா? புருஷனும் பிள்ளைகளும் பூகம்பத்தில் சிக்கி மடிந்து போனார்கள் என்ற சங்கதி வந்ததைக் கேட்டு, அலறி அடித்துக்கொண்டு ரயிலேறிப்போகிற ஒரு பெண் பிள்ளை, ஜன்னலுக்கு வெளியே, ரயில் ஓடும் திசைக்கு எதிர்த்திசையில் பாய்ந்தோடும் இயற்கைக் காட்சிகளைப் பார்த்து அனுபவிக்கப் போகிறாளா என்ன? அதேபோல, நாஸி வீரர்கள் புது இடத்திற்குப் போனால், ரசிப்பார்களா என்ன? என்று நீங்கள் கேட்கலாம், ரஸிக்க அவகாசம் இராதுதான்! ஆனாலும் ஒரு இடத்திலிருந்து மற்றோரிடத்திற்குப் போகும் சமயத்திலாவது, சண்டை போடாமல் 'அப்பாடா!' என்று ரயிலிலோ, லாரிகளிலோ, விமானங்களிலோ இருக்கலாமல்லவா?

ஜெர்மானியர் பின் வாங்கினது எவ்வளவு? —

ஜெர்மானியர் இப்பொழுது ருஷ்யாவில் எவ்வளவு தூரம் பின் வாங்கியிருக்கிறார்கள் தெரியுமா? காகஸஸில் மட்டும் நானூறு மைல்கள், அதாவது சென்னையிலிருந்து திருநெல்வேலி அவ்வளவு தூரம், பின் வாங்கி யிருக்கிறார்கள்.

இதிலேயும் ஒரு தமாஷ், பல வருஷங்களுக்குமுன் நெப்போலியன் மாஸ்கோவைப் பிடிக்க வந்து, கடைசியில் ஏமாற்றமடைந்து எந்த வழியாகச் சோர்ந்துபோய்த் திரும்பினாரோ, அதே வழியாகவே நாஸிப்படைகள் ஓட்டம் பிடித்துக் கொண்டிருக்கின்றன. ஹிட்லரின் படைகளும் மாஸ்கோவைப் பிடிக்க நினைத்தன. ஆனால் அதே மாஸ்கோவில் இப்பொழுது பயமின்றி குதிரைப் பந்தயங்கள் நடக்கின்றன. யூக்ரேனில் டேரா அடித்துக்கொண்டு நிரந்தரமாக வாழ திட்டங்கள் போட்டுக்கொண்டன. காகஸஸ் முழுவதையும் கபளீகரம் செய்து எண்ணெயை அள்ளிக்கொண்டு போகலாம் என்று கனவு கண்டுகொண்டிருந்தன. இப்பொழுது அதெல்லாம் பாழாகப் போய்விட்டது. எங்கேபோய் நிற்கப்போகிறோம் என்பதே நிச்சயமில்லாது பறந்துகொண்டிருக்கின்றன அப்படைகள்.

விஷமம் மட்டும் குறையவில்லை.

அவை இவ்வளவு அடிபட்டு நொந்துபோன பிறகும், அவற்றிற்கு இருக்கும் விஷமம் மட்டும் குறையவில்லை. இரண்டாவது தடவையாக ஜெர்மானியர் ருஷ்யர்களிடமிருந்து கார்காப் நகரைக் கைப்பற்றினார்களா இல்லையா, அப்பொழுது அவர்கள் செய்த அக்கிரமச் செயல்களை நினைத்தாலும் மனம் பதறும்.

அச்சு நாட்டார் அக்கிரமப் பழி

அந்த நகரிலே ஆஸ்பத்திரியிலே, முன் சண்டையிலே காயம் பட்ட ருஷ்ய வீரர்கள் பலர் சிகிச்சை பெற்றுக கொண்டிருந்தார்களாம். 'அடே' உங்களாலும் எங்களுக்கு சில கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன அல்லவா? அதற்கு 'பழிக்குப் பழி கொடுங்கள்' என்று அவ்வீரர்களை இழுத்துச் சென்று, உயிரோடு கொளுத்தி விட்டார்களாம். 'ஐயோ! என்ன அநியாயம்! கேள்வி முறை யில்லையா?' என்பீர்கள். இதையெல்லாம் நேச தேசத்தார் கணக்கெடுத்து வைத்து வருகிறார்கள். ஒரு நாள் இத்தனைக்கும் அச்சு நாட்டார் பதில் சொல்லியே தீர வேண்டும்!

இப்பொழுது, ஜெர்மானியர் பறக்கிற தினுஸைப் பார்த்தால், அவர்கள் க்யூபன் பிரதேசத்தையும், க்ரிமியா பிரதேசத்தையும் காலி செய்து விட்டுவிடலாம் என்று தோன்றுகிறது. இன்னும் ஒரு மாச காலத்திற்குள் மழை கொட்டத் தொடங்கி விடும். எங்கும் ஒரே வெள்ளக்காடாகிவிடும். தரையெல்லாம் கடக்க முடியாத சேருகிவிடும். அப்புறம் ருஷ்யர்கள் இப்போதுள்ள வேகத்தில் முன்னேற முடியாது. ஜெர்மானியரும் பிரமாதமாக எதும் செய்ய முடியாது. அதற்குள்ளாகவே பெரிய வெற்றிகளில் எத்தனையைப் பெற முடியுமோ அத்தனையைப் பெற்றுவிட ருஷ்யர்கள் முயலக் கூடும்.

ஹிட்லருச்கு இரண்டு கண்கள் போதாது

இத்தனை ஆகியும், ஜெர்மனியின் பலம் ஒரேயடியாகக் குலைந்து போய் விட்டது என்று சொல்ல யாரும் தயாராக இல்லை. ஹிட்லர் ஏகப்பட்ட ஏற்பாடுகள் செய்துவைத்திருக்கிறார். ஏதோ அவருக்குப் போருத காலமாதலாலும், நமக்கு நல்ல காலமாதலாலும் சில தவறுகள் செய்தாரவர். அதன் பலனாக நிலை தடுமாறித் தான் நிற்கிறார் அவர். ஒரு கண்ணை ஜெர்மனி மீதும், மற்றொரு கண்ணை மேல் ஐரோப்பா மீதும் வைக்க வேண்டி யிருககிறது அவருக்கு. ஆனால் இரண்டு கண்கள் போதாது. இன்னும் இரண்டு மூன்று இருந்தால் தேவலை.

இப்பொழுது இத்தாலி மீது அவர் கவனம் செலுத்தித் தானே ஆக வேண்டும். பால்கன் பிரதேசத்திலே முணுமுணுப்பு ஏற்பட்டிருக்கிறது. அங்கு சில முக்கியமான இடங்களில் உள்ள இத்தாலியப் படைகளை அப்புறப்படுத்திவிட்டு, அங்கெல்லாம் நாஜிப் படைகளைக் கொண்டு வைத்து விட்டாராம் ஹிட்லர். துருக்கியும், ஸ்பெயினும், போர்ச்சுகலும், ஸ்வீடனும் ஒரு தினுஸாகப் பேசுகின்றன. அங்குள்ளவர்களின் கைகளும் தினவெடுத்துக் கொண்டிருக்கிறாப் போலிருக்கிறது. ஹிட்லர், இதை வேறு கவனித்துக் கொள்ள வேண்டும்.

நான்கு வருடங்கள் பிரமாதமாகப் போராடிய பிறகு, ஐந்தாவது வருஷம் கணக்குப் பார்த்தால், இடிந்து போகும்படியான பலன் தான் ஏற்பட்டிருக்கிறது.

ஆனாலும், ஜெர்மானிய ராணுவ யந்திரம் மகா வலுவுள்ளது. இன்னும் பல காலம் அது சமாளித்துக் கொண்டிருக்கும். அதை அறிந்தே, நேச தேசத்தார் வேறு வழியில் யுத்தத்தை சீக்கிரம் முடிக்க ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்கள் போலிருககிறது. அது என்ன வழி என்று கேட்பீர்கள்.

அது நம்மைவிட, ஜெர்மனியில் உள்ளவர்களுக்கு ரொம்ப நன்றாகக் கேட்கும். தினம் ஜெர்மானியருக்கு பாடம் சொல்லி வைக்க பிரிட்டிஷ் விமானங்களில் கிளம்பி விடுகிறார்கள். 'தம்பிகாள்! வீணாகக் கெட்டு அழியாதீர்கள்! ஹிட்லர் யுத்தத்தை நிறுத்தும் வரை, இல்லை! ஹிட்லரையும் அவர் தூவிய கொள்கைகளையும் பிடுங்கி எறியும் வரை நாங்கள் இந்த குண்டு அர்ச்சனைகளை நிறுத்த மாட்டோம். முதலில் சிரித்தீர்கள் அல்லவா? இப்பொழுது அழுங்கள்' என்று சொல்லாமல் காரியத்தால் சொல்லிக் காட்டுகிறார்கள்.

யுத்தம் ஆரம்பித்த நான்காவது வருஷத்திலே மட்டும், ஜெர்மனி மீது கிட்டத்தட்ட ஒரு லக்ஷசம் டன் குண்டுகள் வீசப்பட்டிருக்கிறதாம். 1940-லே 300 டன்கள் கூட செலவாக வில்லை. அப்புறம் இருபதாயிரம்; 1942-ல் 33 ஆயிரம்; இப்பொழுது 96 ஆயிரம் டன்கள் செலவாகி யிருக்கின்றன. இதன் பலன், ஹாம்பர்க், கீல், பிரெமென் என்ற நகர்கள் பாழாகி விட்டன. ரூர் பிரதேசம் சுடுகாடாகி விட்டது. இப்பொழுது ஹாம்பர்க் நகர் வாசிகள் கண்ட வாண வேடிக்கையை நேச தேச விமானிகள் பெர்லின நகரவாசிகளுக்கு பகல், இரவென்று பாராது காண்பித்துக் கொண்டிருக்கிறார்கள்.

கல்லறைக்குப் போகும் வரை ஹிட்லருச்கு ஓய்வு இல்லை

பெர்லின் நகரம் காலியாகி வருகிறது. ஜெர்மன் மக்களுக்கு கிலி பிடிக்கத் தொடங்கியிருக்கிறது. இவ்வாறு சில காலம் கழியுமானல், ஜெர்மானியரின் மனோ திடம் குலைவு பெறக் கூடும். ராணுவம் எவ்வளவு தான் உறுதியாக இருந்த போதிலும், பொது ஜனங்கள், மனோ திடத்தை இழந்துவிட்டால், சணடை திடு திபபென்று நின்றுவிடக் கூடும். அந்தப் பயம் தான் ஹிட்லருக்குப் பெரிதாக இருக்கக் கூடும். அவர் கல்லறையில் கடைசியாக வைக்கபபடும் வரை, அவருக்கு ஓய்வு இருக்கப் போவதில்லை என்பது மட்டும் நிச்சயம்.

செஞ்சேனையினர் ஸ்டாலினோ என்ற முக்ய நகரத்தைப் பிடித்து விட்டார்கள். அங்கிருந்து நாஜிகள் தப்பியோடுகிறார்கள். ஸ்டாலின்கிராட் வெற்றியைத் தொடர்ந்து, ஸ்டாலினோவிலும் வெற்றி என்பதை நினைக்கும் பொழுது ஸ்டாலினுக்கு எவ்வளவு சந்தோஷமாக இருக்கும்! என்னதான் ஒருவன் பலாட்டியனாக இருந்தாலும், எவ்வளவு தான் எடுத்த எடுப்பில அவனுக்கு வெற்றிகள் ஏற்பட்டாலும், அவை சதமல்ல எனபதும், தர்ம நியாயத்திற்காகப் போராடும் கட்சிக்கே இறுதியில் ஜெயம் ஏற்படும் என்பதும் இதற்கு முன் எத்தனையோ போர்களில் கண்ட உண்மைகளாகும். அவற்றையே இந்நாளைய மக்கள் நேரிலேயே பார்த்துத் தெரிந்து கொள்ளப் போகிறார்கள். அந்த முடிவு தெளிவாக ஏற்படும் வரை, யுத்தம் தொடர்ந்து நடக்கத் தான் நடக்கும்.

இதர விஷயங்கள்.

ஹங்கேரியிலே உள்ள பெரிய நகரமான புடபெஸ்டை, பாதுகாப்பற்ற நகரமாக்கத் தீர்மானித்து விட்டார்களாம். இது தான் புத்திசாலித் தனம்! எதிர் காலத்தில் ஐரோப்பாவைக் காணப் போகிறவர்களுக்கு சந்தோஷமளிக்க இம்மாதிரி ஒரு சில நகரங்களாவது பழைய கோலத்துடனேயே இருக்கு மென்று எதிர் பார்க்கலாமா?

ரோமாபுரியைப் பாதுகாக்க பல ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்களாம். ஆனல் முதலில் அதனுள் இருந்த நாஜிகள் வெளியேற மறுத்தார்களாம். கலாட்டா செய்தார்களாம். அவர்கள் அப்பன் வீட்டு சொத்தல்ல பாருங்கள் ரோமாபுரி! அதனல் தான் அது பாழாகட்டுமே என்று அவர்கள் நினைத்தார்கள் போலிருக்கிறது.

இத்தாலியில் உள்ள ரோம் ரேடியோ அமெரிக்காவையும் பிரிட்டனையும் நோக்கி அலறுகிறது. 'ஐயா! நாங்கள் சரணடைந்தால் எங்களை மதிப்பீர்களா? எங்கள் சுதந்திரத்தைப் பறிக்காதிருப்பீர்களா? இத்தாலியின் ஸ்வரூபத்தைத் அப்படியே வைத்திருப்பீர்களா? இன்னும் வெட்டி நறுக்குவீர்களா?' என்று கேட்கிறதாம் அது. சர்ச்சிலும், ரூஸ்வெல்டும் இத்தாலியைக் குறித்து வாஷிங்டனில் ஏதோ ஊக்கமாகப் பேசிக் கொண்டிருக்கிறார்களாம்.

மத்தியதரைக் கடலின் மேலைப் பாகத்தில் கப்பல் நடமாட்டங்கள் பலமாக இருககின்றனவாம். இங்கிலாந்திலே கடற் கரை ஓரத்திலே ஏராளமான படைகள் காத்திருக்கின்றன என்று ஜெர்மன் ரேடியோ கூறுகிறதாம். ஆனல் முன்னெச்சரிக்கையின்றி பிரான்ஸ் மீது பாயமாட்டோம் என்கிறார்கள் பிரிட்டிஷார்.

க்யூபெக் மகாநாட்டிலே முக்யமாக ஜப்பானின் கொட்டத்தை அடக்கும் விஷயத்தைப் பற்றி அதிகம் பேச எண்ணியதால் தான், ருஷ்யத் தலைவரான ஸ்டாலினை அங்கு வரும்படி அழைக்கவில்லை என்பதாக சர்ச்சில் துரை தமது பிரசங்கத்தில் கூறினர். வாஸ்தவந்தானே? ருஷ்யாவும், ஜப்பானும் சண்டை போட்டுக் கொள்ளுவதில்லை என்று ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கும் பொழுது, ருஷ்யத் தலைவரை வைத்துக் கொணடு ஜப்பானை உதைக்கப் போவது எப்படி என்பதை தாராளமாக எடுத்துப் பேச முடியுமா? அது நன்றாகத்தா னிருக்குமா? அதற்கு ருஷ்யா தான் ஏதாவது உதவ முடியுமா?

ஜப்பானியர்களுடைய பேச்சிலே முன் போல தெம்பு இல்லை. அமெரிக்கர்கள் ஜப்பானுக்கு ஆயிரத்தைந்நூறு மைல்களுக்கும் அருகே உள்ள மார்க்கஸ் தீவு மீது குண்டு போட்டு விட்டார்கள்.

'அங்கே வந்தவர்களுக்கு, ஜப்பானிய மண்ணையும் தரிசிக்க வருவதில் சிரம மேதுமில்லை. ஆகவே, ஜப்பானியர், விரோதிகளின் குண்டு வீச்சுக்கு சித்தமாக இருக்கவேண்டும். எதிர் காலச் சண்டையில் நம் கட்சிக்கு ஏற்படக் கூடிய வெற்றியைப் பற்றி பிரமாத நம்பிக்கை ஒன்றும் வைத்துக் கொண்டு விடாதீர்கள். இனி, நடக்க நடக்கத் தான் பாக்கவேண்டும்' என்று ஜப்பான் ரேடியோ அழுது விட்டது.

ஜப்பான்ன் வசமுள்ள பர்மா, அந்தமான் தீவு, நிக்கோபார் தீவு ஆகியவற்றை இந்தியாவிலிருந்து செல்லும் விமானிகள் அடித்து நொறுக்கி வருகிறார்கள். ஆஸ்திரேலியா அருகிலோ ஜப்பானியர் உதை வாங்கிய வண்ணமாகவே இருக்கிறார்கள். கொஞ்சம் கொஞ்சமாக அவர்கள் தங்கள் வசப்பட்ட இடங்களை தாரை வார்த்துக் கொண்டு வருகிறார்கள்.

ஆகவே ஜப்பானியர் இருக்கும் திசையிலிருந்து ஹிட்லருக்கு நல்ல செய்தி ஒன்றும் வரப்போவதில்லை. கானடா இந்த யுத்தத்திற்குப் பிரமாத உதவி செய்திருக்கிறது. 200 கோடி டாலர்கள் பெறுமானமுள்ள வெடி மருந்துகளை அது காசொன்றும் வாங்காது இனமாகக் கொடுத்திருககிறது. ஏராளமான கப்பல்களைக் கட்டிக் கொண்டிருக்கிறது. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கே இது ஒரு முக்கியமான விமானப் பயிற்சி இடமாக இருக்கிறது. கனடிய வீரர்கள் வட ஆபபிரிகா, ஸிஸிலி, இத்தாலி ஆகிய நாடுகளில் தங்கள் வீரத்தனத்தைக் காட்டி யிருக்கிறார்கள். இத்தகைய கானடாவை மதிக்கும் நோக்கத்தோடு தான், பிரஞ்சு கானடாவின் தலைநகரமான க்யூபெக்கிலே நேச தேசத் தலைவர்கள் கூடினார்கள்.

பெர்லின் மீதும், ஜெர்மனியில் மற்ற இடங்கள் மீதும் போர் விமானங்களின் எதிர்ப்பு இப்போழுது அதிகமாகி வருகிறதாம்.

இப்பொழுது ஒரு வேடிக்கை. சென்ற நூறு வருஷங்களில் ஜெர்மன் பொது ஜனங்கள் யுத்தம் என்பதையே நேரில பார்த்ததில்லை. அந்தக் குறை இப்பொழுது தீர்ந்து விட்டது. இபபொழுது 'சண்டை', மேலேயிருந்து தங்கள் தலை மீது விழுவதை அவர்கள் பார்க்கிறார்கள். கூடிய சீக்கிரம் அது அவர்களுக்கு எதிரே வந்து நிற்கும். அப்புறமும் யுத்தம் நீடிக்கும் என்று நம்பவில்லை நாம்.

(5-ம்பக்கம் தொடர்ச்சி)

பசிபிக் கடலிலே, ஜப்பானியருடைய கரத்திலே சிக்குண்டு கிடந்த தீவுகளை ஒனறனபின் ஒன்ருக ஜெனரல் மக் ஆர்தர் மீட்டுக்கொண்டு வருகிறார். சென்ற வாரம் கிஸ்கா என்ற தீவு, அமெரிக்கப் படையால் பிடிக்கப்பட்டுவிட்டது. ஜப்பானியர் எதிர்க்கவே இல்லை.

ஜப்பானியர் சரணகதி அடையவே மாட்டார்களாம் என்று எனக்குச் சிலர் கூறினர். ஜபபானியர், கால் பிடரியில் பட, பின்னோக்கி ஓடுகிறார்களே அதுவே நமக்குப் போதும் என்று ஜனதிபதி ரூஸ்வெல்டு நகைச்சுவையுடன கனடாவிலே பேசினர்.

சீனவும், ஜப்பானின் வெறியாட்டத்தைச் சமாளித்துவிட்டது. ஆகவே, போரின் நிலைமை இன்று நேசநாட்டிருக்குச் சாதகமாவதாக இருககிறது. வெற்றிப் பாதையிலே நேச நாட்டினர் வேகமாக முன்னேறி வருகின்றனர். அச்சு நாட்டினருக்கு அச்சம் பிறந்திருககிறது, அழிவு தம்மைக் கூவி அழைப்பது அச்சு நாட்டினரின் செவியிலே வீழ்கிறது. வெற்றி வெறி பிடித்தலைந்த அச்சு நாட்டினர், தோல்விப் படுகுழியை நோக்கித் துரத்தப் படுகின்றனர். அபயம் கோரினல் பிழைப்பர், இல்லையேல் அழிககப்படுவர். இதுவே அச்சுநாட்டினரின் இன்றைய நிலைமை.

இந்தியர்கள் பெருமுயற்சி.

இந்த அற்புதமான மாறுதல் உண்டாக அரும்பாடுபட்டவர்களிலே இந்தியப் படை புகழ் மிக்க பங்கு எடுத்துள்ளது. ஆபபிரிக்காவிலே நாலாயிரம் இந்தியப் பட்டாளம், வீரதீரமாகப் போராடி, வெற்றிக்கு உதவியதை நேசநாட்டுத் தலைவர்களெல்லாம் பாராட்டியுள்ளனர். இத்தகைய வீரர்களைத் திரட்டித்தர இந்தியா செய்த மகத்தான சேவையை மறபபதற்கில்லை. படைக்கு ஆள திரட்டவும், பணந்திரட்டவும், பாதுகாபபுப் பத்திரங்கள் விற்கவும், போர் சம்மந்தமான உண்மையை ஊராருக்கு எடுத்துரைக்கவும், இந்தியாவும் முககியமாகத் தென் இந்தியாவும் எடுத்துக கொண்ட முயற்சி அபாரமானது. போர் நிலைமையைச் சரியாக உணராமல், சிலர் தாறுமாருன கொள்கைகளைப் பேசிக் கொண்டு, போர் ஆதரவு வளராதபடி தடுக்க வேலை செய்தபோது, இந்தியாவிலே தெளிவுள்ள மக்கள் யாவரும், போர் ஆதரவைத் திரட்ட மகத்தான பணியாற்றினர். அவர்களின் அரும்பணி இன்று நேச நாட்டு வெற்றிக்குத் தேவையான பொருள், படை, பிரசாரம் எனும் மும்மணிகளை அளித்தது.

போர் நிலைமை நேச நாட்டினருக்குச் சாதகமாகத் திரும்பி இருப்பது கண்டு, போர் ஆதரவுக்காக பெரும் பணியாறறிய இந்தியா பூரிக்கிறது இயல்பே. நேச நாட்டினர் பெற்றுவரும், ஒவ்வோர் வெற்றியும் இந்தியாவுக்குத் தேன்போல் இனிபபை ஊட்டுகிறது. அச்சு நாட்டினர் அடியோடு அடிக்கப்பட்டு, வெற்றி விழாவும் சமாதானமும் நடந்தேறும் திருநாள், எபபோது, எப்போது என்று இந்தியா ஆவலுடன் எதிர் நோக்கியபடி இருக்கிறது. அந்தத் திருநாள் விரைவினில் வந்தே தீரும். நிச்சயமாக வந்தே தீரும் என்று உறுதியுடனும் உற்சாகத்துடனும் நாம் கூறும் விதத்திலே இன்றைய போர் நிலைமை இருககிறது. வெற்றி நமதே. வெற்றி முரசை வெகு சீக்கிரத்தில் முழங்க வேண்டியதற்கு நாம் ஒவ்வொருவரும் அவரவர்களால் செய்யக்கூடிய பணியை பதின் மடங்கு அதிகமாகச் செய்ய உடனே முன் வரவேண்டாமா?

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.